வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 29.12.2021 புதன்கிழமை இதழ் : 24 பக்கங்கள் : 16




## தமிழக மீனவர்களை கைது செய்தது கச்சத்தீவு ஒப்பந்தத்துக்கு எதிரானது

### மதுரை நீதிமன்றத்தில் வழக்கு

மதுரை, டிசெ. 29

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட 68 தமிழக மீனவர்களையும், 10 படகுகளையும் விடுவிக்கக்கோரி சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் அவசர மனு ஒன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மோர் பண்ணையைச் சேர்ந்தவர் ஜி.திரு முருகன் என்ற தீரன் 15

## உடல்எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை இலங்கையில் உயர்வு!

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

ஜெனிவா, டிசெ. 29

உடல்நிறை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை இலங்கையில் அதிகரித்து வருகின்றது என்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 15



## கொரோனாவுக்கு 22 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 29

கோவிட்-19 தொற்றால் நாட்டில் நேற்று முன்தினம் 22 உயிரிழப்புகள் பதிவாகின என்று அரசாங்க தகவல் திணைக்களம் உறுதிபடுத்தியுள்ளது.

30 வயதுக்குக் குறைந்த ஓர் ஆண், 30 - 59 வயது பிரிவில் 2 ஆண்கள், 4 பெண்களுமாக 6 பேர், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 9 ஆண்களும், 6 பெண்களுமாக 15 பேர் என 22 பேர் உயிரிழந்தனர். 15

### இந்தியப் பிரதமருக்கான கடிதம்

# முஸ்லிம் கட்சிகளின் இழுபறியால் கையொப்பமிடல் பின்செல்கிறது

யாழ்ப்பாணம், டிசெம்பர் 29

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிடும் தினம் முதலாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. இந்தக் கடிதத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்பதே இதற்குக் காரணம் என்று நம்பகமான வட்டாரங்கள் ஈழநாடுவுக்கு தெரிவித்தன. 15

## கடிதத்தில் கையொப்பமிடுவதற்கு காலஅவகாசமே கோருகின்றோம்!

### அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 29

“13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியப் பிரதமரை கோரும் கடிதத்தில் கையொப்பமிடுவதற்கு கால அவகாசமே கோரியுள்ளோம்.”, என்று அகில இலங்கை 15

## சைவ சமய அமைப்புக்கள் ஓரணியில் இயங்க இணக்கம்!

வவுனியா, டிசெ. 29

யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு, மலையகம், தென் மேல் சிவப் பிராந்தியங்களில் இயங்கும் சைவ சமய அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு செயல்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா கோவில் 15

## சர்வஜன வாக்கெடுப்பின் மூலமே தமிழ் மக்களுக்கு தீர்வு சாத்தியம்!

### விக்னேஸ்வரன் எம். பி.

யாழ்ப்பாணம், டிசெ. 29

“தமிழ் மக்களுக்கான நிறைந்த இறுதித் தீர்வு சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தமிழ் கட்சிகள் காலம் காலமாக சமஷ்டியை ஒரு தீர்வாக 15

## வல்வெட்டித்துறை பட்ட திருவிழாவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சு ஆதரவு!



வடமராட்சி, டிசெ. 29

வல்வெட்டித்துறை பட்டத் திருவிழாவுக்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு முழு ஆதரவு வழங்குகிறது. இதனால், வரும் 15

## புகையிரத நிலைய அதிபர்கள் போராட்டம் முடிவுக்கு வந்தது!

கொழும்பு, டிசெ. 29

புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளதாக அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுடன் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் 15

## 3000 வர்த்தக நிலையங்கள் கொழும்பில் மூடப்பட்டன!

கொழும்பு, டிசெ. 29

சிறு வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட மூவாயிரத்துக்கும் அதிகமான உணவகங்கள் சமையல் எரிவாயு மற்றும் பால்மா ஆகியவற்றுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாகப் புறக்கோட்டையில் 15

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றிய முன்னாள் பிரதிநிதிகள்மீது வழக்கு

### 30 மாதங்களுக்கு பிறகு குற்றப்பத்திரிகை தாக்கல்!

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் 2019 மே 03ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போது, கைது செய்யப்பட்ட முன்னாள் மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளான மாணவர்கள் இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 15



## சீனா - இந்தியாவின் இராஜதந்திர மூலோபாய போட்டிக்குள் வடக்கு!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 29

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுக அபிவிருத்திக்கான உரிமையை பெறுவதில் இந்தியா, சீனா இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்த இரு நாடுகளும் கடற்றொழில் அமைச்சிடம் தமது விருப்பங்களை தெரிவித்துள்ளன.

இதேசமயம், கிளிநொச்சி - பூநகரி கௌதாரி முனையில் கடல் அட்டை பண்ணை வளர்ப்பில் சீனா ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், அங்கு மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் திட்டம் ஒன்றை செயல்படுத்த இந்தியா முயன்று வருகின்றது. 15



# இப்படியும் நடக்கிறது…!

ஊர்க்குருவிக்கும் வைரஸ் தாக்கிவிட்டதோ என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அப்படி ஒன்றும் இது வரை நடந்துவிடவில்லை என்பது நிம்மதியானதுதான்.

நமது மூத்தபோராளிகளில் ஒருவர். லண்டனில் இருந்து ஒலித்த ரி. பி. சி. வானொலியின் இயக்குநர். தமிழ் உலகறிந்த அரசியல் விமர்சகர். இப்படி பல முகங்கொண்டவர் ராமராஜ் வீரையா. புலிகளின் கோட்டைக்குள் சென்று மாவீரர் உரையை தனது வானொலியிலும் தொண்ணுறுகளிலேயே ஒலிக்க விட்டவர். அதனால் சில நெருக்கடிகளைச் சந்தித் தாலும் தளராதவர்.

அவர் தனது முகநூலில் எழுதியிருந்த பதிவு ஒன்று கவனத்திற்குரியது. அதனை இங்கு குறிப்பிடாமல் விடுவது பொருத்தமாக இருக்காது என்பதால் அதனை அப்படியே தருகின்றேன்.

“தமிழ் கட்சிகள் ஒன்றிணைவது தொடர்பில் ரெலோ வினால் முன்னெடுக்கப்பட்ட விடயம் அனைவரும் அறிந்ததே. ஆரம்ப கூட்டங்களில் தமிழ் அரசு கட்சி கலந்து கொள்ளவில்லை. பின்பு மூன்றாவது கூட்டத் தில் பல திருத்தங்களை முன்வைத்து புதிய ஆவணம் தயாரிக்கப்பட்டு அந்த ஆவணத்தில் கட்சி தலைவர்கள் கையெழுத்து வைக்க இருக்கும் வேளையில், அரசாங் கத்தில் பங்காளி கட்சியாக இருக்கும் ஓர் இராஜங்க அமைச்சரை இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் தமிழ் தேசிய கூட்டமைப் பின் பங்காளி கட்சிகளுடன் கலந்து ஆலோசிக்காமால் அதுவும் இந்த கூட்டத்தை ஒழுங்கு செய்த ரெலோ வின் அனுமதி பெறாமால் அழைப்பது என்பது அர சின் இந்தியாவுக்கு எதிரான திட்டத்தின் நடவடிக் கையா என சந்தேகம் ஏற்படுகிறது.

“கடந்த 25 ஆண்டுகளாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனவும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக ஆதரிக்கும் அமைச்சர் டக்ளஸை அழைக்காத விடயங்களை பார்க்கும்போது ஏதாவது ஒரு வகையில் தமிழ்பேசும் மக்களுக்காக இந்தியாவின் பங்களிப்பை தவிர்ப்பதில் தமிழ் அரசு கட்சியும் ராஜ பக்ஷ சகோதர்களும் திட்டமிட்டு செயல்படுவது போல தெரிகிறது. அதனுடைய ஆரம்பம்தான் சம் பந்தன் இந்தியாவின் பிரதமர் மோடியின் அழைப்பை பங்காளி கட்சிகளுக்கும் அறிவிக்கமால் நிராகரித்த தும், அமெரிக்காவின் பயணம் போன்ற நகர்வுகளை பார்க்கின்றபோது இந்தியாவுக்கு எதிரான திட்ட மிடல் தெளிவாக தெரிகிறது.”

இப்படி தனது ஊகத்தை பதிவிட்டிருக்கிறார் ராம ராஜ். கூட்டமைப்பையும் அதன் அரசியலையும் மிக மூர்க்கமாக எதிர்த்து கருத்திட்டுவந்த ராமராஜ், அண் மையில் சில காலமாக சுமந்திரனின் அரசியலை ஆத ரித்து அவ்வப்போது தனது முகநூலில் பதிவிட்டு வந் ததையும் இந்த ஊர்க்குருவி கவனிக்கத் தவறியதில்லை. ஆனால், அவரே இப்போது ஒரு சந்தேகத்தை கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறார்.

இந்தச் சந்தேகம் அவருக்கு மட்டுமல்ல, பலருக்கும் இருக்கலாம்.

தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டத்தை ஒழுங்கு செய்தது ரெலோ என்பது தெரிந்ததுதான். ஆனால், அந்த கூட்டத்தை ஆரம்பத்தில் நிராகரித்த தமிழ் அரசுக் கட்சி, குறிப்பாக அதன் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் சித்தார்த்தனை இந்த தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் பணிக்கு தலைமை தாங்குமாறு அழைப்பு விடுத்தார். அது ரெலோவின் முயற்சியை அவர்கள் ரசிக்கவில்லை என்பதை பறை சாற்றியிருந்தது.

அதன் பின்னரே இந்த முயற்சியில் ரெலோவுடன் புளொட்டும் பங்குகொள்ள ஆரம்பித்தது.

சம்பந்தனின் தனிப்பட்ட பண்புகள் சில பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் பல தடவை குறிப்பிட் டிருக்கின்றோம். கூட்டமைப்பில் இருக்கும் பல எம். பிக்களை அவர் ‘கனம்’ பண்ணும் முறை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறோம். தமிழ் அரசைப் பொறுத்த வரை ரெலோவின் ஏற்பாட்டில் ஒன்றிணைவது என்பதே ரசிக்கக்கூடிய விடயமல்ல என்பதும் இரக சியமானதல்ல.

நம்மை மீறி ஒருவர் எதையாவது நல்லதைச் செய்ய முன்வந்தால் அதனை எப்படிக் குழப்பலாம் என்றே சிந்தித்து பழக்கப்பட்டவர்கள் நமது தலைவர்கள். ஆகக்குறைந்தது, துரோகிப் பட்டத்தையாவது சூட்டி அதனைக் குழப்பிவிடுவார்கள்.

இல்லையேல் இருக்கவே இருக்கிறது இந்தியாவின் மூன்றெழுத்து.

இன்னமும் அது பற்றிய செய்தி வரவில்லை என்று ரெலோ நிம்மதி பெருமூச்சு விடலாம்.!

**- ஊர்க்குருவி**

# இலங்கைக்கு வந்துள்ள 70,000 வெளிநாட்டவர்கள்

கொழும்பு, டிசெ. 29

டிசெம்பர் மாதத்தில் சுமார் 70,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந் துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை கூறியுள் ளது.

பெரும்பாலான சுற்றுலாப் பய ணிகள் இந்தியா, இங்கி லாந்து, ஜேர்மனி, ரஷ்யா, அமெரிக்கா மற் றும் அவுஸ்தி ரேலியாவில் இருந்து வந்துள்ள னர் என இலங்கை சுற் றுலா அபிவிருத்தி அதிகார சபை யின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டுக்கு வரும் சுற்று லாப் பயணிகளின் வருகை வீதத்தி லும் அதிகரிப்பு காணப் படுவதாக அவர் குறிப்பிட்டார்.

2022 ஜனவரியில் சுமார் 80,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவ தாகவும் விஜேசிங்க குறிப்பிட்டார்.

# பந்தை எடுக்க முயன்ற சிறுவன் கிணற்றில் விழுந்து உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 29

மெதிரிகிரிய, குசும்பொகுன பிர தேசத்தில் கிணறொன்றில் விழுந்து ஒன்பது வயது சிறுவன் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குசும்பொகுண ஆரம்பப் பாட சாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் எச்.கே சமந்த கவிந்து சந்தருவன் குமார என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சிறுவன் விளையாடிக் கொண்டி ருந்த பந்து இரண்டு நாட்களுக்கு முன் வீட்டின் பின்புறமுள்ள கிணற் றில் விழுந்துள்ளது. பந்தை எடுத்து தருமாறு பலமுறை கேட்டும் தந்தை அதை மறந்துள்ளார்.

தாய் தனது இளைய சகோதரனு டன் அயல் வீட்டுக்கு சென்றிருந்த போது கிணற்றிலிருந்து பந்தை எடுக்க முற்பட்ட போதே சிறுவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக் கலாம் என்று பொலிஸார் சந்தேகிக் கின்றனர்.

சிறுவன் காணாமல்போயுள்ளா ரென பெற்றோர்கள் மெதிரி கிரிய பொலிஸாருக்கு முறைப்பாடு செய்த பின்னர் பல்வேறு இடங்களில் சிறுவனை தேடியுள்ளனர். இருந்த போதும் சிறுவன் கிடைக்கவில்லை.

கிணற்றில் விழுந்ததாகக் கூறப் படும் பந்து முற்றத்தில் காணப்பட் டது.

# மனோ எம். பிக்கு தமிழில் அழைப்பாணை!

கொழும்பு, டிசெ. 29

‘நல்லாட்சி’ அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல்களை விசாரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழு மனோ கணேசன் எம். பிக்கு தமிழில் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அந்த அழைப்பாணையில் இன்று புதன்கிழமை அவரை விசாரணைக்கு சமுகமளிக்குமாறு மனோ கணேசன் வசிக்கும் எல்லைக்கு பொறுப்பான பொலிஸ் நிலையம் ஊடாக அந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

இந்த அழைப்பாணை கடந்த வாரம் மனோ கணேசனுக்கு தனி சிங்களத்தில் அனுப்பப்பட்டது. அதை ஏற்க மறுத்த அவர் தமக்கு தமிழில் கடிதம் அனுப்புமாறு கூறித் திருப்பியனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**29.12.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**29.12.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
29.12.2021 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## ராஜபக்ஷவின் ஆருடம்?

அரசாங்கம் தொடர்ந்தும் நெருக்கடிளை சந்தித்து வருகின்றது. நெருக்கடிகளின் மையமாக இருப்பது பொருளாதார பிரச்னைகளாகும். நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் சரிவை சந்தித்துவருகின்றது. இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைய வேண்டும் அல்லது ஒரு வல்லரசிடம் சரணடைய வேண்டும். அது சீனாவாக இருந்தால் உலக அதிகார போட்டிக்குள் இலங்கை சிக்குவதை தடுக்கவே முடியாது.

இந்த நிலையில், அரசாங்கத்தின் நிலைமை இருதலைகொள்ளி எறும்பு போல் காணப்படுகின்றது. ஒருபுறம் அரசாங்கம் தொடர்பில், சிங்கள மக்கள் மத்தியில் அதிருப்திகள் அதிகரித்து வருகின்றன - மறுபுறம், ஆளும்தரப்பிற்குள் சலசலப்புக்கள் அதிகரித்து வருக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில்தான், மொட்டு ஆட்சியின் பங்காளிகளில் ஒருவரான விஜயதாச ராஜபக்ஷ, அடுத்த ஆண்டு, நடுப்பகுதியில் ஆட்சி மாற்றமொன்று ஏற்படலாமென்று ஆருடம் கூறியிருக்கின்றார்.

2015இல் ஆட்சி மாற்றத்தின் தோல்வியிலிருந்துதான் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இடையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியை இலகுபடுத்தியது. சிங்கள மக்களின் ஆதரவுடன் கோட்டாபயவால் இலகுவாக வெற்றிபெற முடிந்தது. கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி தென்பகுதியில் சிங்கள தேசிவாத எழுச்சியொன்றும் ஏற்பட்டது. கோட்டாபய போன்ற ஒருவர்தான் தங்களுக்கு பொருத்தமானவர் என்னும் அடிப்படையில், சிங்கள - பௌத்த தேசியவாத சக்திகள் அனைவரும் ஓரணியில் திரண்டிருந்தனர். ஆனால், அவ்வாறான அனைவரும் இப்போது தோல்வி மனோநிலைக்குள் சிக்குப்பட்டிருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான் விஜயதாச ராஜபக்ஷ மேற்படி கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

ஆட்சி மாற்றம் இலகுவான ஒன்றா? தற்போதுள்ள அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கட்சி ரீதியாக பலமாகவே இருக்கின்றது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய பங்காளிகள் மொட்டை விட்டு வெளியேறினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இந்த அரசாங்கம் இழந்துவிடும். ஆனால், பங்காளிகள் வெளியேறினால்கூட அரசாங்கத்தால் சமாளிக்க முடியும். ஆனால், ஒரு பலமான அரசாங்கமாக இருக்க முடியாது. அப்படியானதொரு சூழல் உருவானால், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமே நாட்டை வழிநடத்த நேரிடும். அவ்வாறான சூழலில் மேலும் நெருக்கடிகள் இடம்பெறலாம். இவ்வாறான சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டுமாயின், பெரும் எண்ணிக்கையிலான மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்த்தரப்புடன் கைகோக்க வேண்டும். அவ்வாறு நடந்தால், ஆட்சி மாற்றம் சாத்தியமான ஒன்றுதான் ஆனால், - இதிலும் ஒரு சிக்கல் உண்டு. நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஒரு பக்கமாகவும்- பாராளுமன்றம் பிறிதொரு பக்கமாகவும் இருக்கின்ற போது, நாடு மீண்டும் நெருக்கடிக்குள்தான் விழ நேரிடும்.

அதேவேளை, ஆட்சியை புதியவர்கள் பொறுப்பேற்றாலும்கூட, அவர்களால் இந்த நெருக்கடிநிலையிலிருந்து நாட்டை உடனடியாக மீட்க முடியாது. இந்த அடிப்படையில் சிந்தித்தால், எதிரணியினரைப் பொறுத்தவரையில் ஆட்சி மாற்றத்தை விடவும், அரசாங்கம் மேலும் சரிவை சந்திப்பதுதான், அவர்களுக்கு சாதகமானது. இவற்றைக் கருத்தில் கொண்டுதான், ஆட்சி மாற்றம் தொடர்பில் எதிரணிகள் சிந்திப்பர்.

2015இன் ஆட்சி மாற்றம் தோல்வியிலேயே முடிந்தது. சரியான திட்டமிடல்கள் இல்லாமையாலேயே தோல்வி ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்திற்கு பின்னால் இந்தியா மற்றும் அமெரிக்கா இருந்தன என்று அப்போது பரவலாகப் பேசப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷவும் இந்திய உளவுத் துறையின் மீதே முதலில் குற்றம் சாட்டியிருந்தார். அது உண்மையாயின், அவர்களுக்கும் ஆட்சி மாற்றம் ஏமாற்றத்தையே கொடுத்திருந்தது. ஆட்சி மாற்றமொன்று தொடர்பில் சிந்திக்கும் போது இவ்வாறான பல விடயங்கள் குறுக்கிடும்.

# சிறுபான்மை இன மக்கள் விழிப்புடனிருக்க வேண்டிய காலம்!

**அலசுவது இராஜதந்திரி**



அரச தரப்பினரின் நடவடிக்கைகளை நோக்கும்போது இன்றைய சூழலில் வடக்கு - கிழக்கு மக்கள் மிக விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமானதாகின்றது. ஏனெனில், நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலை மிக மோசமான நிலையிலிருப்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலாளர் பி. பி. ஜயசுந்தர தமது பதவியிலிருந்து இராஜிநாமா செய்துள்ளமை எடுத்துக்காட்டுகின்றது.

இதுதவிர, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்றைய ஆட்சியாளரின் கையாலாகாத்தனத்தை வெளிப்படையாகவே விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர். இதுகுறித்து ஜனாதிபதியும் மனக்கிலேசம் அடைந்தவராக தமது ஆட்சியின் நடவடிக்கைகளை அரச தரப்பில் இருப்போர் விமர்சிப்பதை தவிர்க்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

பொருளாதார நிலவரத்தை எடுத்து நோக்குகையில் கடன் சுமை தாங்க முடியாது மேலும் கடன் பெற வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையின் ஆட்சியாளரை சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுமாறு ஆலோசனை கூறுமளவுக்கு நாட்டின் பொருளாதார நிலவரம் 'பிச்சாடனர்' நிலைக்கு வந்துள்ளது.

நாட்டின் கடந்தகால அரசாங்கங்களை நோக்கும்போது சிறந்த தலைமைத்துவங்களை அவை கொண்டிராதபோதிலும், பொருளாதார நிலவரம் இன்றிருப்பது போல படுமோசமானதாகக் காணப்பட்டிருக்கவில்லை.

ஆனால், இன்று அரசாங்கத்தின் தலைமையிடம் ஒழுங்கான பொருளாதார திட்டங்கள் இல்லாதிருப்பதுடன் அரசியல் ரீதியாகவும் பலவீனமுற்ற நிலையில் காணப்படுகின்றது. இந்நிலையில் பொருளாதார பிரச்னைகள் மற்றும் அரசியல் குளறுபடிகள் என்பவற்றிலிருந்தும் நாட்டு மக்களை திசை திருப்பி விடுவதற்கு அரசு இன-மத ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்திவிட முடியும்.

ஏற்கனவே, கடந்த சில தினங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மத ரீதியாக மக்களை புண்படுத்தும் சில நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. பல வழிபாட்டுத் தலங்களில் வழிபாட்டுச் சின்னங்கள் களவாடப்பட்டுள்ளன. இவை யாவற்றுக்கும் மேலாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற குருந்தூர்மலை பகுதியில் மீளவும் பௌத்த விகாரை ஒன்றைக் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் குருந்தூர் பகுதியில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள தடை விதித்துள்ளதையும் மீறிய நிலையிலேயே தற்போது அங்கே இராணுவத்தினரின் உதவியோடு அகழ்வாராய்சிப் பணிகளும் புதிய விகாரை அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை நோக்கும்போது இராணுவத்தினரை அரச தரப்பு தனது சுயநல அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய அடாவடித்தனமான நடவடிக்கைகளுக்கு தொல்பொருள் திணைக்களமும் உடந்தையாக இருப்பதோடு குருந்தூர்மலைப் பகுதியில் பௌத்த மத அடையாளங்கள் இருப்பதற்கான சான்றுகள் இருக்கின்றன என்றும் அரசுக்கு தொல்லியல் திணைக்கமள் துதிபாடியுள்ளது.

இன்று முழுநாடுமே பொருளாதார ரீதியாக அழிவின் விளிம்பில் வந்துள்ளது. இத்தருணத்தில் எவ்வாறு நாட்டை வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் பாதுகாக்க முடியுமென்று திட்டங்களை மேற்கொள் வதைவிட மத ரீதியான சர்ச்சைகளை ஏற்படுத்தி மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப அரச தரப்பு முயற்சிப்பதையே காணமுடிகின்றது.

இத்தகைய கட்டத்திலேயே சிறுபான்மையின மக்கள் குறிப்பாக, வடக்கு - கிழக்கு மக்கள் மிகுந்த விழிப்புடன் உணர்ச்சி வசப்படாத நிலையிலிருக்க வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.

பொருளாதார நிலவரத்தைப் பொறுத்தவரை எரிகின்ற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்பதுபோல இந்தியாவும் சீனாவும் இலங்கையின் வங்குரோத்து நிலையை அறிந்து இலங்கையிலுள்ள வளங்களை தமது நலன்களுக்காக பயன்படுத்த போட்டியிட்டுக் கொண்டிக்கின்றன.

இந்தியா தற்போது திருகோணமலையிலுள்ள எண்ணெய் குதங்களை பயன்படுத்த தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளது. இந்தியாவோ அல்லது சீனாவோ இலங்கை தொடர்பாக எடுக்கும் தீர்மானங்கள் மற்றும் முன்வைக்கும் நிபந்தனைகள் என்பவை தொடர்பாக "பிச்சைக்காரனுக்கு தெரிவில்லை" (Beggar has no option) என்ற வகையில் இலங்கை அரச தரப்பினால் எதனையும் நிராகரிக்கவோ அல்லது எதிர்க்கவோ முடியாதிருக்கின்றது.

இத்தகைய பின்னணியில் நாட்டில் பெரும்பான்மை மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப அரசு மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை கையாள முன்வரமுடியும். இதன் வெளிப்பாடாகவே வடக்கு - கிழக்கு மக்களின் மத உணர்வுகளை புண்படுத்தும் நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றன.

எனவே, வடக்கு-கிழக்கு மக்கள் மிக அவதானமாக விழிப்புடன் இருக்க வேண்டியதே இக்காலகட்டத்தில் அவசியமானதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 29 புதன்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 14
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : ஏகாதசி




**மேடம்**
சேமிப்பு உயரும். பணிச்சுமை கூடும். குடும்ப நிம்மதி மீளும். திடீர் இலாபம் வரும். சமீபத்திய கவலைகள் ஒரு வழியாக நீங்கும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து நிம்மதி பெறுவீர்கள்.

**இடபம்**
சக பணியாளர்களின் அனுசரிப்பு காரணமாக வெல்வீர்கள். நண்பருக்கு உதவி செய்யப்போய் சங்கடத்தில் மாட்ட வேண்டாம். நல்லவரின் உபதேசத்தைப் புறக்கணிக்காமல் ஏற்பீர்கள்.

**மிதுனம்**
பேச்சில் உங்களின் அனுபவ அறிவு வெளிப்படும். குடும்ப மகிழ்ச்சி கூடும். நல்லவர்களிடம் இருந்து உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு ஏற்பட்ட அதிருப்திகள் அனைத்தும் சரியாகும்.

**கடகம்**
அலுவலகத்தில் முக்கியப் பொருட்களைக் கவனமாக கையாளுங்கள். ஜீரணம் சம்பந்தமான சிறு சிறு பிரச்னைகள் வந்து சரியாகும். கலைத்துறையில் ஈடுபாடு ஏற்படும். உழைப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்**
வெளியூரில் இருந்து மனம் இனிக்கும் செய்திகள் வந்து சேரும். வாழ்க்கைத்துணையின் மூலம் நன்மை ஒன்று நிகழும். பிறருக்கு உதவிகரமாய் நடந்து கொண்டு செல்வாக்கு அடைவீர்கள்.

**கன்னி**
புதிய துறையில் ஆர்வம் ஏற்பட்டு அதில் பயிற்சி பெறுவீர்கள். அலுவலகப் பணத்தைக் கையாளும் போது நேர்மையாக இருங்கள். நீங்கள் எதிர்பார்த்திருந்த புதிய செய்தி தாமதமாக வரும்.

**துலாம்**
சுற்றியுள்ளோரின் அன்பும் ஆதரவும் உங்களுக்கு கிடைக்கும். நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். மனதில் மகிழ்ச்சி பெருகும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
பண விஷயத்தில் இருந்து வந்த தடைகள் இன்று அகலும். சிறு சிறு தேவைகள் உடனுக்குடன் நிறைவேறி மகிழ்ச்சி தரும். திட்டமிட்ட பயணம் சற்றே தள்ளிப்போனாலும் மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படுவதை தவிர்க்கலாம். மகிழ்ச்சியும் சிரமமும் கலந்த பலன்களாக இன்று இருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுறுசுறுப்பு கூடும்.

**மகரம்**
தாயாருக்கு உடல் உஷ்ணத்தால் ஏற்பட்ட சிரமம் நீங்கும். மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பணியில் ஆர்வம் அதிகரிக்கும். வாகனத்தின் மூலம் செலவு ஏற்படும். நேர்மை நிம்மதி தரும்.

**கும்பம்**
முன்பு இருந்த சிரமம் தீரும். நண்பர்கள் உயர்நிலை அடைவர். நேற்றைய கவலைகள் முழுக்கத் தீர்ந்து இன்று நிம்மதி பிறக்கும். பொது விஷயங்களைப் பொறுப்புடன் நடத்தி மகிழ்வீர்கள்.

**மீனம்**
வீண் பழி வரக்கூடிய செயல்களில் இறங்க வேண்டாம். தேவையற்ற சச்சரவுகளில் ஈடுபடாதிருந்தால் இனிய நாள். கலகலப்பான நாள். நண்பர், உறவினரின் சந்திப்பு நிகழும்.

# காங்கிரஸ் இல்லாத கூட்டணிகள் பா.ஜ.கவுக்குத்தான் வழி வகுக்கும்

## தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி



சென்னை, டிசெ. 29

காங்கிரஸ் இல்லாத கூட்டணிகள் பா.ஜ.கவுக்குத்தான் வழி வகுக்கும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் நிறுவப்பட்ட தினத்தை ஒட்டி நேற்று தமிழக காங்கிரஸ் தலைமை அலுவலகம் சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றார் கே.எஸ். அழகிரி. அப்போது காங்கிரஸ் கூட்டணி பற்றிய கேள்விக்கு பதிலளித்த அழகிரி,

“மேற்கு வங்க முதல்வர் மம்தா பனர்ஜி காங்கிரஸ் கூட்டணி பற்றி தெரிவித்த கருத்துக்கு, மகாராஷ்டிராவில் இருக்கும் சிவசேனா கட்சி பதில் அளித்துள்ளது. ‘காங்கிரஸை அப்புறப்படுத்துவது என்ற கொள்கையை பா.ஜ.க. கையாண்டு வருகிறது. அந்த கொள்கையை நாமும் கையாண்டால் அது பா. ஜ. கவுக்கே பலன் கொடுக்குமே தவிர, அது நமக்கோ காங்கிர ஸுக்கோ அல்ல. எனவே மம்தா பானர்ஜியின் முடிவு தவ றானது’ என்று தனது அதிகார பூர்வ இதழில் சிவசேனா கூறியிருக்கிறது. நாங்கள் கூறுவதைவிட எங்கள் நண்பர்கள் கூறியதை விட பா.ஜ.கவோடு நீண்ட கால நண்பராக இருந்த சிவசேனா இதைக் கூறியிருக்கிறது. சில தினங்களுக்கு முன் தி.மு.கவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், “காங்கிரஸ் இல்லாத கூட்டணி சாத்தியமல்ல. நாங்கள் காங்கிரஸை மையமான கூட்டணியில்தான் இருக்கிறோம்’ என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் தலைவரான திருமாவளவன் அவர்கள் பேசும்போது காங்கிரஸ் இல்லாத கூட்டணி பற்றி சிந்திக்கக் கூடாது என்று முதல்வரை வைத்துக் கொண்டு பேசியிருக்கிறார். நேற்று தா. பாண்டியன் நினைவுக் கூட்டத்தில் பேசிய பலரும் காங்கிரஸ் கூட்டணியை பற்றித்தான் பேசியிருக்கிறார்கள். எனவே எங்களுடைய மதசார்பற்ற கூட்டணி தெளிவாக இருக்கிறது” என்று கூறியிருக்கிறார் கே.எஸ். அழகிரி.

# தி.மு.க.வை மக்கள் புறக்கணிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை

## சசிகலா அறிக்கை



சென்னை, டிசெ. 29

எம்.ஜி.ஆர். நினைவிடம் செல்ல தனக்கு அனுமதி மறுத்துள்ள நிலையில், தி.மு.க.வை மக்கள் முற்றிலுமாக புறக்கணிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்று சசிகலா கூறியுள்ளார்.

சசிகலா தனது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

“எம்.ஜி.ஆரின் நினைவு நாளில், நான் தொண்டர்களோடு எம்.ஜி.ஆரின் நினைவிடத்தில் நேரில் சென்று அஞ்சலி செலுத்த இருந்த நிலையில், திடீரென்று 23-ஆம் திகதி சென்னை காவல்துறை ஆணையாளரிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், கொரோனா நோய்த்தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கையாக பொது இடங்களில் மக்கள் கூடுவதை தடுப்பதற்காக எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த அனுமதி மறுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

காவல்துறையினரின் ஆணைக்கு மதிப்பளித்து, கொரோனா விதிமுறைகளை கடைபிடித்து, அலுவலக வளாகத்திலே அஞ்சலி செலுத்தினோம். அதே நாளில் தமிழக முதல்-அமைச்சரே பொது இடத்தில் கூட்டம் சேர்த்து ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதை தொலைக்காட்சிகளில் பார்க்க முடிந்தது. அதே போல், கோவையில் ஆளுங்கட்சியின் சார்பாக பொதுக்கூட்டம் என்ற பெயரில் ஏராளமானவர்களை ஒரே இடத்தில் கூட்டம் சேர்த்து எந்தவித கொரோனா தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல், அவர்களுடைய கட்சி சார்ந்த நிகழ்ச்சி ஒன்றை நடத்தியுள்ளனர். ஆகவே, இதுபோன்ற ஆளுங்கட்சியினரின் செயல் பாடுகள் மட்டும் தமிழக காவல் துறையினரின் கண்களில் படாமல் போய் விடுகிறதா?.

ஒமைக்ரோன் மெரினாவை சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் பரவக்கூடிய ஒரு வைரசா? அண்ணாசாலை மற்றும் கோவை கொடிசியா மைதானம் போன்ற பகுதிகளில் பரவாதா? என்று மக்கள், அடுக்கடுக்கான கேள்விகளை கேட்கிறார்கள். தமிழக மக்கள் தி.மு.க.வை முற்றிலுமாக புறக்கணிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.” இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் உரிய பாதுகாப்புடன் ஜல்லிக்கட்டை நடத்தமுடியும்

## அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உத்தரவு

சென்னை, டிசெ. 29

உரிய பாதுகாப்புடன் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்த தமிழக கால்நடைத்துறை அலுவலர்களுக்கு, மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் பொங்கல் பண்டிகையையொட்டி மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. இதனையடுத்து, அனைத்து வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்திட கால்நடைத்துறை அலுவலர்களுக்கு, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை நந்தனம் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பேசிய அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று துறை சார்ந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், கால்நடை வளர்ப்பு மூலம் பெறும் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்களை செயல்படுத்தவும் ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்து பேசிய அவர், ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் 38,000 பேருக்கு தலா 5 ஆடுகள் வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், நபார்டு நிதி உதவியுடன் ரூ.57.56 கோடி மதிப்பில் 85 கால்நடை நிலையங்கள், 3 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## நுவரெலியாவுக்கு படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்!

கொழும்பு, டிசெ. 29

வருட இறுதி விடுமுறையினை முன்னிட்டு நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்தினை நோக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாலும் இவ்வருடத்தின் இறுதி விடுமுறையாக காணப்படுவதனாலும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையைக் கழிப்பதற்காக செல்கின்றனர்.

இவ்வாறு சென்றவர்களில் பெருபாலானவர்கள் சுகாதார விதி முறைகளை பின்பற்றத் தவறுவதனால் எதிர்காலத்தில் மீண்டும் ஒரு தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் எனவே சுற்றுலாப் பயணிகள் சுகாதார விதி முறைகளை பின்பற்றுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை காரணமாக டெவோன் மற்றும் சென் கிளையார் நீர் வீழ்ச்சி காட்சிக் கூடங்களில் வாகனங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

மக்கள் வருகை தந்த போதிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக பொதுமக்கள் பொருட்கள் கொள்வனவு செய்வதில் தயக்கம் காட்டி வருவதாகவும் வர்த்தக நடவடிக்கைகள் சூடுபிடிக்கவில்லை என்றும் மக்கள் தங்களது அத்தியாவசிய தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்து கொள்வதற்கு பொருட்கள் கொள்வனவில் ஈடுபடுவதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (அ)

# கிளிநொச்சியில் வசித்த மூதாட்டி சடலமாக முதலைப்பாலத்துக்குள்!

### உரப் பையில் கட்டப்பட்ட நிலையில் மீட்பு



கிளிநொச்சி, டிசெ. 29

**லண்டனில் இருந்து திரும்பி கிளிநொச்சி-உதயநகர் பகுதியில் வசித்த வயோதிபப் பெண் ஸ்கந்தபுரம் முதலைப் பாலத்தில் உரப்பையொன்றில் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இராசேந்திரம் இராசலட்சுமி (வயது-67) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.**

குறித்த பெண்ணைக் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்தப் பெண் தங்கியிருந்த வீட்டில் இரத்தக்கறை காணப்படுவதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது.

லண்டனில் மகனுடன் வசித்து வந்த அவர் மூன்று வருடங்களின் முன் இலங்கை திரும்பியுள்ளார்.

கிளிநொச்சி அம்பாள் குளம் உதயநகர் பகுதியில் உள்ள காணியை பார்ப்பதற்காக குறித்த பகுதியில் வாடகைக்கு வீடெடுத்து தங்கியிருந்துள்ளார்.

தனியாக வசித்து வந்த அவர் நேற்று முன்தினம் வங்கிக்குச் சென்று திரும்பியுள்ளார். பிற்பகல் 3.00 மணி முதல் 6.00 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அவர் காணாமல்போயுள்ளார்.

அந்தப் பெண் இவ்வாறு காணாமல்போயுள்ள விடயம் நேற்று இரவு முன் தினம் 7.20 மணியளவிலேயே உறவினர்களுக்கு தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் காணாமல் போயுள்ளமை தொடர்பில் வீட்டு உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த வீட்டின் உள்ளே இரத்தக் கறைகள் காணப்படுவதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

இவ்வாறு காணாமல்போன பெண் பூநகரி தம்பிராய் பகுதியை சேர்ந்தவர் என்றும் அவரது 5 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருவதாகவும், கணவர் விவசாயம் செய்து வருவதாகவும் தெரியவந்தது. (அ)

## உரப் பிரச்னைக்கு பெப்ரவரியில் தீர்வு

### ரமேஸ் பத்திரன கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 29

முன்பதிவு செய்யப்பட்ட உரத்தொகை நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அடுத்த வருடம் பெப்ரவரி மாதமளவில் உரப்பிரச்னைக்கு முழுமையாக தீர்வு எட்ட முடியும் எனவும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

நிவாரண முறையில் எதிர்காலத்தில் உரம் வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்படி, 100 கிலோ கிராம் பச்சைக் கொளுந்துக்கு 40 கிலோ உரம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ரமேஸ் பத்திரன குறிப்பிட்டார்.

உரம் மற்றும் பூச்சி கொல்லிகள் இன்மையால் மரக்கறிகளின் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்காரணமாக மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

நாட்டின் பெரும்பாலான பொருளாதார மத்திய நிலையங்களில் பச்சை மிளகாய் கிலோ ஒன்றின் சில்லறை மற்றும் மொத்த விலை 800 ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதுதவிர, போஞ்சி, கரட், பீட்ரூட், லீக்ஸ் மற்றும் கோவா ஆகியவற்றின் மொத்த விலை 220 ரூபா முதல் 500 ரூபாவாக காணப்படுகின்றது. (அ)

## மத்திய வங்கி ஆளுநர் கப்ராலை 'டொலர் மாபியா' என்றார் சஜித்!

கொழும்பு, டிசெ. 29

"வீடுகளிலுள்ள அடுப்புகளில் தற்போது நெருப்பு இல்லை. மக்களின் மனங்களில்தான் நெருப்பு உள்ளது. அந்தளவுக்கு பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன." - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்தான் மாபெரும் டொலர் மாபியா. பொருளாதாரச் சீரழிவுகளை செய்துவிட்டு இன்று ஆளுநர் பதவியை வகிக்கின்றார். வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரிக்கும் எனவும் அறிவிப்புகளை விடுத்துவருகின்றார்.

இந்நாட்டு பொருளாதாரம் நெருக்கடி நிலைக்கு வந்ததற்கு இவர் உட்பட மேலும் பலர் பொறுப்பு கூறவேண்டும். அதில் ஒருவர் பதவி விலகபோவதாக தெரிவிக்கப்படுகின்றது. பதவி விலகுவதால் பொறுப்பு கூறலில் இருந்து தப்பித்துவிடமுடியாது. நிச்சயம் பொறுப்பு கூறியாக வேண்டும்-என்றார். (அ)

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்

# முன்னாள் தலைவர், செயலாளருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ். பல்கலைக்கழகத்துக்குள் 2019 மே 03ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போது, கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப்பொருள்களை பாரப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்திலும், விடுதிகளிலும் பெருமெடுப்பில் சோதனைகளை முன்னெடுத்தனர்.

நூற்றுக்கணக்கான படையினர் இந்த தேடுதலில் ஈடுபட்டனர். இந்த தேடுதலின்போது, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம், மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாதைகள், உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ்.கபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ அதிகாரியால் எழுத்து மூல ஆவணம் ஒன்று பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் முன்னிரவு யாழ்ப்பாணம் நீதிவானின் இல்லத்தில் மாணவர்கள் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மாணவர்கள் இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உப விதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்கு ஏற்பாடுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதனால் மாணவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும் பிணை வழங்கக்கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப்பெறுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு சட்ட மா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் 13 நாள்களின் பின்னர் மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சுமார் 30 மாதங்களின் பின்னர் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் 2019 மே 3ஆம் திகதி நடத்திய தேடுதலில் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் ஒட்டப்பட்டிருந்தமையை அடுத்து சிற்றுண்டிச்சாலை நடத்துநர் கைது செய்யப்பட்டார். அவர் 12 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் மீதான வழக்கு பொலிஸாரினால் மீளப்பெறப்பட்டது. (அ-3)

## நைஜீரியாவுக்கு நாட்டு வளங்களை கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும்

ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29
நைஜீரியாவிலிருந்து கடன் அடிப்படையில் மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்ய வுள்ளதாக ராஜபக்ஷ அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்த கடனை மீளச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் நாட்டிலுள்ள முக்கிய பகுதிகளை நைஜீரியாவுக்கு விற்க வேண்டியேற்படும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

சிறிகொத்தாவில் கட்சிச் செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த நிலைமை தொடர்ந்தால் கடன் பெற்றுக் கொண்ட அனைத்து நாடுகளுக்கும் இலங்கையின் வளங்களைக் கொடுக்க வேண்டிய நிலையே ஏற்படும் என அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே நாட்டில் தற்போது காணப்படும் டொலர் நெருக்கடிக்கு தீர்வு காண, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் மாத்திரமே முடியும் என அவர் சுட்டிக் காட்டினார். (அ)

## அருட்தந்தையர்கள் பயணித்த கார் அடித்து நொருக்கப்பட்டது

கிளிநொச்சி, டிசெ. 29
கிளிநொச்சி - மயில்வாகனபுரத்தில் நத்தார் நிகழ்வு முடிந்து பயணித்த அருட்தந்தயர்களின் கார் வீதியில் மறிக்கப்பட்டு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு நத்தார் ஒன்று கூடல் நிகழ்வு முடிந்து அதில் கலந்து கொண்ட ஏழு அருட்தந்தையர்களில் ஒருவரை தவிர ஏனையவர்கள் தங்களின் அருட் தந்தையர்களுக்குரிய ஆடைகளுடன் கார் ஒன்றில் திரும்பிக்கொண்டி ருந்தபோது சுமார் 10 பேர் கொண்ட இளைஞர் குழுவொன்று மதுபோதையில் மயில்வாகனபுரத்தில் காரை வீதியில் மறித்து அருட்தந்தை யர்களிடம் பணம் கோரியுள்ளது.

இதற்கு அருட்தந்தையர்கள் மறுப்புத் தெரிவித்தபோது அவர்கள் பயணித்த வாகனம் அடித்து உடைக்கப்பட்டதோடு, அருட்தந்தையர்கள் மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது மூன்று சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டுள்ள னர் எனவும் தர்மபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

கெரவலப்பிட்டிய விவகாரத்தில்

# விமல், வாசு, கம்மன்பில ஆகியோர் நீதிமன்றத்துக்கு சென்றமை தவறு!

ஜனாதிபதி கோட்டாபய சுட்டிக்காட்டு



**கொழும்பு, டிசெ. 29**
**கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலைய விவகாரத்தில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நீதிமன்றத்தை நாடியமை தவறு என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின்போது, முக்கிய விடயங்களில் அரசாங்கத்துக்குள் காணப்படும் பலதரப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக வினவியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

குறித்த அமைச்சர்கள் தமது பதவிகளில் இருந்து பதவி விலகி நீதிமன்றத்துக்கு சென்றிருக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாதமை அரசாங்கத்துக்குள் இருக்கும் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சி என்றும் ஜனாதிபதி கூறினார்.

மறைந்த அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் அவ்வாறானதொரு நடவடிக்கையை முன்னெடுத்தபோது, நீதியரசர் மார்க் பெர்னாண்டோ இந்த விடயம் தொடர்பாக தீர்ப்பு வழங்கியிருந்தார் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். (அ)

## ஒமைக்ரோன் வைரஸ் தொற்றை அடையாளம் காண பரிசோதனை

கொழும்பு, டிசெ. 29
நாட்டில் பரவியுள்ள சந்தேகிக்கப்படும் ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் மாறுபாட்டைக் கண்டறியும் விசேட பரிசோதனை நேற்று முதல் நடத்தப்படுவதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதிலும் இருந்து சுமார் 100 மாதிரிகள் பெறப் பட்டுள்ளதாக ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் இந்த சோதனையை நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. இலங்கையில் இதுவரை 7 ஒமைக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்.மாவட்ட கட்டளை தளபதி நல்லை ஆதீனத்துடன் சந்திப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 29
யாழ்.மாவட்டத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா நேற்று மரியாதை நிமித்தம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

நல்லை ஆதினத்துக்கு சென்ற யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியை நல்லை ஆதீன குருமுதல்வர் பொன்னாடை போர்த்தி வரவேற்றதோடு இராணுவத் தளபதியால் நல்லை ஆதீன குருமுதல்வருக்கு நினைவுப் பரிசும் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த நல்லை ஆதீன முதல்வர்,

புதிதாக யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக பதவி ஏற்றுள்ள என்னை இன்று மரியாதை நிமித்தம் சந்தித்தார். அவர் புத்தாண்டுக்காக என்னை வந்து சந்திப்பதாக தெரிவித்திருந்தார்.

தற்போதைய யாழ்.மாவட் நிலைமை தொடர்பில் விளக்கமாக கேட்டறிந்துகொண்டதோடு அண்மையில் யாழ். மாவட்டத்தில் இந்து விக்கிரகங்கள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.



இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்படுவதை தடுத்து நிறுத்துமாறு நான் அவரிடம் கோரியுள்ளேன்.

அத்துடன் எதிர்வரும் தைப்பொங்கல் உற்சவத்தை இந்து மக்கள் அனைவரும் சுதந்திரமாக கொண்டாடுவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்க மாறும், கிராமங்களில் ஆலய வழிபாட்டுக்கு இராணுவத்தினரால் இடையூறு ஏற்படாத வாறு செயற்படவேண்டும் என்றும், குறிப்பாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று பொது மக்கள் தமது வழிபாடுகளையும் மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும், எதிர்வரும் புத்தாண்டு நிகழ்வை பொதுமக்கள் சுதந்திரமாக கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் கோரினேன்.

தற்போதைய நிலையில் இனங்களுக்கிடையில் விரிசல் நிலை ஏற்படுகின்ற நிலை காணப்படுகின்றது. இது தொடர்ந்தால் பெரிய ஒரு பிரச்னையாக உருவெடுக்கும். அதனை நிறுத்துவதற்கு தங்களாலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முன்வைத்தேன்.

அதற்கு பதில் அளித்த இராணுவ கட்டளைத் தளபதி இவை தொடர்பில்தான் உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி எடுப்பதாக தெரிவித்தார்-என்றார். (அ-03)

## ஜப்பானிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிட ஏற்பாடு

அந்நாட்டு தூதுவர் வாக்குறுதி

கொழும்பு, டிசெ. 29
ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை வழங்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் இலங்கையர்களுக்கு முன்னுரிமையில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்துள்ளார்.

கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், "ஜப்பானுக்கும் இலங்கைக்கும் நீண்ட நட்பு வரலாறு உண்டு. இலங்கைக்கு ஜப்பான் எப்போதும் ஆதரவளித்து வருகிறது.

அடுத்த வருடம் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 70ஆவது ஆண்டு நிறைவு வருகின்றது. அதனைக் கொண்டாடுவதற்காக கண்டிக்கு வந்து தலாதா மாளிகையில் வழிபட்டேன்.



ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறேன். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குத் தேவையான ஆதரவை வழங்கவும் நாங்கள் நம்புகிறோம்.

அதிகளவான ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைத்து, இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

தற்போது இலங்கையில் ஜப்பானால் செயல்படுத்தப் பட்டு வரும் ஜப்பானிய திட்டங்களைத் தொடரவும் எதிர் பார்க்கிறோம். ஜப்பானிய முதலீட்டாளர்கள் ஊடாக இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்க எதிர்பார்ப்பார்க்கின்றோம் - என்றார். (அ)

# முக்கிய 3 நாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு பூட்டு!

கொழும்பு, டிசெ. 29

தெரிவு செய்யப்பட்ட பிரதான மூன்று நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய நைஜீரியாவில் உள்ள இலங்கை தூதரகம், பிராங்பேர்ட்-ஜேர்மனியில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம், நிக்கோசியா-சைப்ரஸில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் ஆகியன எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் மூடப்படவுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்ற இந்தத் தீர்மானமானது, வெளிநாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் பணிமனைகளின் வலையமைப்பின் மறுசீரமைப்புச் செயன்முறையின் ஒரு பகுதியாகும். உலகளாவிய தொற்று நோயால் முன்வைக்கப்படும் கடுமையான பொருளாதார சவால்களின் பின்னணியில் இருதரப்பு உறவுகளை திறம்பட முன்னெடுப்பதனை உறுதி செய்யும் அதேவேளையில், நாட்டுக்குத் தேவையான வெளிநாட்டு இருப்புக்களைப் பாதுகாத்தல் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்களைப் பராமரித்தல் தொடர்பான செலவீனங்களைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட மூன்று தூதரகங்கள் மூடப்பட்டவுடன், இருதரப்பு அரசியல், பொருளாதாரம், கலாசார உறவுகள் மற்றும் தூதரக செயல்பாடுகளைப் பராமரித்தல் உள்ளிட்ட அவற்றின் செயல்பாடுகள் அங்கீகாரம் பெற்ற தூதரகங்களின் கீழ் வரும் அதே வேளையில், அபுஜா மற்றும் நிக்கோசியா ஆகியவற்றின் விடயங்கள் இலங்கையின் வதிவிடமல்லாத தூதரகங்களால் மேற்கொள்ளப்படும்.

இது சம்பந்தமாக, கென்யாவின் நைரோபியில் உள்ள இலங்கை தூதரகம் ஊடாக நைஜீரியாவுக்கு ஒரே நேரத்தில் அங்கீகாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், ஆபிரிக்காவில் உள்ள ஏனைய நாடுகள் முறையே அபுஜாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாகவும், கெய்ரோவில் உள்ள இலங்கைத் தூதரகம், எகிப்து மற்றும் நைரோபியில் உள்ள தூதரகம் ஊடாகவும் ஒரே நேரத்தில் அங்கீகாரம் பெற்றுள்ளன.

பிராங்பேர்ட்டில் உள்ள இலங்கையின் துணைத்தூதரகத்தின் செயல்பாடுகள், வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு, அத்துடன் பிராங்பேர்ட் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இலங்கைப் பிரஜைகளின் கொன்சியூலர் விவகாரங்கள் ஆகியன ஜேர்மனியின் பேர்ளினில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சீனாவின் நம்பிக்கையை எதிர்க்கட்சி வென்றுள்ளது

## சஜித் பிரேமதாஸ பெருமிதம்



**கொழும்பு, டிசெ. 29**

**சீனாவின் நம்பிக்கையை தம்மால் வெல்ல முடிந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் மருத்துவ உபகரண நன்கொடை திட்டமான ‘ஹஸ் மாக்’க்கு சீன அரசாங்கம் 19.6 மில்லியன் ரூபாயை நன்கொடையாக வழங்கியது.

சீனத் தூதுவர் கியூ சென்ஹொங்கிடமிருந்து நன்கொடையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொண்டார்.

சிறுநீரக நோயாளர்களுக்கான இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

ஒரு வெளிநாட்டுத் தூதரகம் எதிர்க்கட்சிக்கு நிதி வழங்குவது இதுவே முதல் முறை என குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ, சீனாவின் நம்பிக்கையை தம்மால் வெல்ல முடிந்துள்ளது என்றும் பெருமிதம் வெளியிட்டார்.

கொரோனா தொற்று பரவலை அடுத்து நாடளாவிய ரீதியில் உள்ள 34 மருத்துவமனைகளுக்கு 101 மில்லியன் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளதாகவும் சஜித் பிரேமதாஸ கூறினார். (அ)

# சிறிதரன் எம்.பியின் ஒதுக்கீட்டிலிருந்து வடமராட்சி கிழக்கில் உதவி வழங்கல்





வடமராட்சி, டிசெ. 29

பராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வெண்ணிலா விளையாட்டு கழகத்தின் புனரமைப்புக்காக ஒரு இலட்சம் ரூபாவும், வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியர் விளையாட்டு கழகம், ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகம், உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம், நாகர்கோவில் நாகதீபம் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கு தலா ஐம்பதாயிரம் வீதம் நிதி ஒதுக்கப்பட்டே குறித்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆ.சுரேஸ்குமார், சி.பிரசாத், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராம சேவகர்கள், அதிகாரிகள், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-02)

# பூநகரியில் இளைஞன் கொலை: பெண் உட்பட நான்கு பேர் கைது!

கிளிநொச்சி, டிசெ. 29

கிளிநொச்சி - பூநகரி, கௌதாரி முனை பகுதியில், சுற்றுலா சென்றவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களும், குருநகர் பகுதியை சேர்ந்தவர்கள்.

கடந்த 26ஆம் திகதி நடந்த மோதலில், ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியை சேர்ந்த ரஞ்சன் நிரோஷன் என்ற 22 வயதுடைய இளைஞன் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பிலேயே 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 46 வயதான பெண், 51, 55, 40 வயதுடைய ஆண்களே கைதாகியுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது. பூநகரி பொலிஸாரினாலேயே அவர்கள் கைது செய் யப்பட்டனர். (அ-2)

# இலங்கை கடனை செலுத்துவதற்கான அவகாசத்தை நீடித்தது பங்களாதேஷ்

கொழும்பு, டிசெ. 29

பங்களாதேஷ் வங்கியிடம் இருந்து இலங்கை பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடனைத் திருப்பிச் செலுத்தும் மூன்று மாத கால அவகாசம் முடிவடைந்த நிலையில் இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கால அவகாசம் நீடிக்கப்பட்டது என பங்களாதேஷ் வங்கி அறிவித்துள்ளது. பங்களாதேஷ் ஊடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் மூன்று தவணைகளின் அடிப்படையில் 200 மில்லியன் டொலர் பணம் பெற்றுக்கொள் ளப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் 19 இல் 50 மில்லியன் டொலர்களையும் 100 மில்லியன் டொலர் இரண்டாவது தவணை ஓகஸ்ட் 30 அன்றும் 50 மில்லியன் டொலர் இறுதி தவணை செப்ரெம்பர் 21 அன்றும் வழங்கப்பட்டது.


இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி, பங்களாதேஷுக்கு கடன் தொகைக்கு வட்டியாக 2 சத வீதத்தை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டும்.

ஆறு மாதங்களுக்குப் பின்னரும் தவணை நிதி செலுத்தப்படாமல் இருந்தால், 2.5 சத வீதம் மற்றும் கடன் தொகை திருப்பிச்செலுத்த வேண்டும்.

எனினும் இலங்கை குறைந்தபட்சம் ஒன்பது மாதங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்தும் என தாம் எதிர்பார்ப்பதாக பங்களாதேஷ் மத்திய வங்கியின் அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

கொரோனா தொற்று காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதனால் கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் 3.4 சதவீதமாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனவரி 9 இலங்கை வருகிறார் சீன வெளிவிவகார அமைச்சர்!



கொழும்பு, டிசெ. 29

சீன - இலங்கை தரப்புகளுக்கிடையே அண்மை காலத்தில் சர்ச்சைக்குரிய சம்பவங்கள இடம்பெற்றுள்ள நிலையில் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகைதர உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவருடன் தூதுக்குழுவொன்றும் நாட்டை வந்தடையவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சீன உரக் கப்பல் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பில் அண்மையில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

அவ்வாறான பின்னணியில் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரவுள்ளமை முக்கிய கவனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




ஜோனாதன் அமோஸ்

# விண்ணில் ஏவப்பட்ட உலகின் மிகப்பெரிய விண்வெளி தொலைநோக்கி

இதுவரை பூமியில் தயாரிக்கப்பட்ட தொலைநோக்கிகளிலேயே மிகவும் பெரிய தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி பிரெஞ்சு கயா னாவில் இருந்து விண்ணுக்கு ஏவப் பட்டது.

இது தமது சுற்றுவட்டப் பாதையை அடைந்த பின்பு அதன் ஏவல் வெற்றி கரமாக நடந்ததைக் காட்டும் சமிக்ஞை கள் கென்யாவில் உள்ள அன்ரனா ஒன்றால் பெறப்பட்டது.

ஏவப்பட்ட பின்னர் அரைமணி நேரத்துக்கும் குறைவான நேரத்தில் ஜேம்ஸ் வெப் பூமிக்கு இந்த சமிக் ஞையை அனுப்பியது.

பிரெஞ்சு கயானாவில் உள்ள கோவ்ரு விண்வெளி நிலையத்திலிருந்து 'அரியேன்' செயற்கைக்கோள் ஏவல் நிறுவனத்தின் ராக்கெட் ஒன்றின் மூலம் ஜேம்ஸ் வெப் ஏவப்பட்டது.

ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி விண்ணில் ஏவப்படும் காட்சியை வெளியிட்டுள்ள அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா, இந்தத் தொலைநோக்கி விண்ணில் இப்போது பாதுகாப்பாக உள்ளது என்று கூறியுள்ளது.

பிரபஞ்சத்தில் 1350 கோடி ஆண்டு களுக்கு முன்பு என்ன நடந்தது? பிறகு, உயிர்கள் எப்படி உருவாகின? என்பன போன்ற இரகசியங்களைத் தேடுவதற் காக, ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலை நோக்கி ஏவப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய விண்வெளி அதிகாரிகள் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளனர்.

ஜேம்ஸ் வெப் ஸ்பேஸ் டெலஸ்கோப் எனப்படும் அந்தத் தொலைநோக்கியை ஏரியன் ரொக்கெட்டின் முனையில் பொருத்தி மூடுவதற்கு முன்பு விஞ்ஞானி கள் இறுதிச் சோதனைகளை முடித்தனர்.

ஜேம்ஸ் வெப்பை ஹபிள் விண் வெளி தொலைநோக்கியின் வாரிசு என்று கூறுலாம். இதைக் கட்டமைப் பதற்கு 10 பில்லியன் அமெரிக்க டாலர் செலவழிக்கப்படுகிறது. இலங்கை மதிப் பில் இது சுமார் 2 இலட்சத்து 2ஆயி ரத்து 502கோடி ரூபாய்.

இந்தப் புதிய தொலைநோக்கி, நமது பிரபஞ்சத்தை அதன் முன்னோடிகளை விட இன்னும் ஆழ்ந்து பார்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 13.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிரபஞ்சத்தில் நடந்த நிகழ்வுகளைக் கண்டறியும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

விஞ்ஞானிகள் அதன் மேம்பட்ட திறன்களைப் பயன்படுத்தி தொலைதூ ரத்தில் சூரிய குடும்பத்துக்கு வெளியே உள்ள கோள்களின் வளிமண்டலங்களை ஆய்வு செய்ய முடியும் என நம்புகிறார் கள். அங்கு உயிர்கள் வாழ்ந்த, வாழ் வதற்கான அறிகுறிகள் ஏதேனும் கண்டறியப்படலாம் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்கிறது.

ஜேம்ஸ் வெப் திட்டத்தை முன் னின்று நடத்துவது அமெரிக்காவின் விண்வெளி அமைப்பான நாசா. அதனுடன் இணைந்து ஐரோப்பிய விண்வெளி அமைப்பான ஈ.எஸ்.ஏ செயல்படுகிறது. ராக்கெட்டில் தொலைநோக்கி பொருத்தப்பட்டதைக் காட்டும் புகைப்படங்களை இந்த நிறுவனங்கள் சனிக்கிழமையன்று வெளியிட்டன.

வளிமண்டலத்துக்குள் நுழைந்து செல்லும்போது தொலைநோக்கியை எரிந்துவிடாமல் பாதுகாக்கும் ராட்சத அமைப்பு லேசர்களின் உதவியுடன் பொருத்தப்பட்டது.

வெப் மற்றும் அதில் பொருத்தப் பட்டிருக்கும் தங்கக் கண்ணாடிகளை பூமியில் நாம் கடைசியாகப் பார்க்கும் வாய்ப்பு இதுவே. 30 வருடங்களாக வடிவமைக்கப்பட்டு, கட்டமைக்கப் பட்ட இந்த விண்வெளித் தொலை நோக்கியை இனி விண்ணில்தான் பார்க்க முடியும்.

ராக்கெட் பூமியில் இருந்து புறப் பட்டு, தொலைநோக்கியை விடுவிக்கும் இடத்துக்குக் கொண்டு செல்ல சுமார் 30 நிமிடங்கள் ஆகும். இதன் பிறகான சாகசப் பயணத்தைக் காட்டுவதற்காக ராக்கெட்டில் வீடியோ கேமரா ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது.

தொலைநோக்கியில் இருந்து தரைக் கட்டுப்பாட்டு அறையில் இருக்கும் உபகரணங்களுக்கு தரவுகளைக் கடத்தும் தகவல்தொடர்பு கேபிளை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், ஏவுதலை சில நாட்க ளுக்கு நிறுத்தி வைத்திருந்தனர். இது சரி செய்யப்பட்ட பிறகு, தொலைநோக்கி யின் இயங்கு தன்மை சோதிக்கப்பட்டது.

"தொலைநோக்கியை தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க-ஐரோப்பிய கூட்டுக் குழு கடைசித் தருணம் வரை தொடர்ந்து எச்சரிக் கையாக இருக்கும்" என்று கூறினார் நாசாவின் அறிவியல் இயக்குநர் தாமஸ் ஸூர்புக்கென்.

"நாங்கள் இந்தத் தொலைநோக்கியில் எந்த ரிஸ்க்கையும் எடுக்க விரும்ப வில்லை" என்று அவர் செய்தியாளர்களி டம் கூறினார். "ஏற்கனவே இது அபாயங்களைக் கொண்டது. அதனால் எல்லாம் முறையாகச் செயல்படுவதை நாங்கள் முழுமையாக உறுதிசெய்து கொண்டிருக்கிறோம்."

பிரெஞ்ச் கயானாவில் பணிகளை நிர்வகிக்கும் பிரெஞ்சு நிறுவனமான Arianespace, வரும் செவ்வாயன்று ஒரு ஏவுதல் தொடர்பான தயார்நிலை மதிப் பாய்வை நடத்தும். எந்தப் பிரச்னையும் இல்லை என்று முடிவுக்கு வந்தால், முனையில் தொலைநோக்கி பொருத்தப் பட்ட ஏரியன் ராக்கெட், ஏவுதளத்துக்கு கொண்டு செல்லப்படும்.

ராக்கெட் வெள்ளிக்கிழமை தரை யிலிருந்து புறப்பட அரை மணி நேர கால சாளர வரம்பு அளிக்கப்பட்டிருக் கிறது.

மோசமான வானிலை அல்லது சிறிய தொழில்நுட்ப சிக்கல்கள் ஏதேனும் தெரியவந்தால், நிர்ணயிக்கப்பட்ட நாளில் ராக்கெட்டை செலுத்த முடி யாது. அதன் பிறகு, ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் உந்து எரிபொருள்களை தயாரிப்பதற்கு ஒரு நாள் அவகாசம் தேவைப்படும். அதனால் டிசெம்பர் 25 அல்லது 26 ஆம் தேதிகளில் ஏவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

"ராக்கெட் இருக்கும் இடத்திலேயே ஆக்ஸிஜன் மற்றும் ஹைட்ரஜனை நாங்கள் தயாரிக்கிறோம். இது ஏரியன் ராக்கெட்டுக்கு மூன்றுமுறை முழுமை யாக எரிபொருள் நிரப்பும் அளவுக்கு உற்பத்தித்திறன் கொண்டது" என்று ஐரோப்பிய விண்வெளி அமைப்பின் விண்வெளி போக்குவரத்து இயக்குநர் டேனியல் நியூயன்ஷ்வாண்டர் கூறினார்.

ஏரியன் ராக்கெட்டில் இந்தப் பயணத்துக்காக பலவிதமான மாற்றங் கள் செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, புவி வட்டப் பாதைக்கு முன்னேறும்போது அழுத்தம் குறை வதை உறுதி செய்வதற்காக, ராக்கெட் டின் கூம்பு முனையின் பக்கங்களில் சிறப்புத் துளைகள் போடப்பட்டிருக்கின் றன. பாதுகாப்பு அடுக்கு அகற்றப்படும் போது, தொலைநோக்கியை சேதப்படுத் தக் கூடிய அளவு புறச்சூழலில் மாற்றம் இல்லை என்பதை இது உறுதி செய்யும்.

பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஒரு கண்காணிப்புப் புள்ளிக்கு செல்லும் பாதையில் வெப் விண்வெளித் தொலை நோக்கியை ஏரியன் ராக்கெட் வீசியெறி யும்.

அதன் பிறகான பயணம் ஒரு மாதம் நீடிக்கும். அந்த நேரத்தில் வெப் தொலைநோக்கி அதன் 6.5 மீட்டர் விட்டம் கொண்ட முதன்மை கண்ணாடி மற்றும் சூரியனின் ஒளி மற்றும் ஒளி பத்திலிருந்து பாதுகாக்கும் டென்னிஸ் ஆடுகளம் அளவிலான கேடயத்தை விரித்துக் கொள்ளும்.

பிரபஞ்சத்தின் தொடக்கப் புள்ளியா கக் கருதப்படும் பிக் பேங் என அழைக்கப்படும் பெருவெடிப்புக்கு பிறகு உருவான தொடக்க காலப் பொருட்களைப் படம்பிடிப்பதே வெப் தொலைநோக்கியின் குறிக்கோள்.

கருதுகோள்களின்படி, இவை முதல் விண்மீன் திரள்களில் இடம்பெற்ற நட்சத்திரங்களாகும்.

எக்ஸோப்ளானெட்ஸ் என்று அழைக் கப்படும் நமது சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள்களின் வளிமண்ட லங்களையும் வெப் தொலைநோக்கி ஆய்வு செய்ய இருக்கிறது. உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான வாயுக்கள் அங்கு இருக்கின்றனவா என்பது குறித்து ஆய்வு செய்வதற்கும் விஞ்ஞானிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

"பொதுமக்களும், வானியல் ஆய்வாளர்கள் தங்களுக்குள்ளேயும் கேட்டுக் கொண்டிருக்கும் மிக அடிப் படையான, "நாம் தனியாகத்தான் இருக் கிறோமா? பூமி தனித்தன்மை கொண் டதா?, உயிர்கள் வாழத்தக்க பிற கோள் கள் உள்ளனவா?" என்பன போன்ற ஒரே மாதிரியான கேள்விகளுக்குப் பதிலளிக்க ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஒரு வாய்ப்பைப் பெறும்" என்று ஐரோப்பிய விண்வெளி அமைப்பின் வெப் தொலை நோக்கித் திட்ட விஞ்ஞானி அன்டோ னெல்லா நோட்டா கூறினார்.

# பாணின் விலை அதிகரிப்பும் உணவுமுறை பற்றிய கவனமும்

**பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை குறித்த பேக்கரிகளே தீர்மானிக்கலாம் எனும் அறிவித்தலை தொடர்ந்து எதிர்காலத்தில் இந்த விலைகள் என்னவாக மாறுமோ எனும் பதட்டம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.**




அகிலன் கதிர்காமர்
கா. சுகன்யா

உணவுமுறை என்பது பழக்கத்திற்குட்பட்டது. தற்போது வடமாகாண மக்கள் பாணுக்கு பழக்கப்பட்டு விட்டார்கள். அது ஒரு ஆரோக்கியமான உணவு என்பதால் அல்ல இலகுவாக பெறக்கூடியதாக உள்ளதால். தற்போது பாணை உணவாக பெற்றுக் கொள்வதற்கு நெருக்கடி வந்துள்ளது. நாட்டில் பொதுவாக பல பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு காரணம் நாம் இறக்குமதியில் தங்கியிருப்பதுதான்.

**இறக்குமதியும் பாண் உற்பத்தியும்**

2020 ஆம் ஆண்டு நிதியமைச்சின் ஆண்டறிக்கையின்படி கோதுமை மற்றும் சோளம் ஆகியன 384 மில்லியன் அமெரிக்க டொலருக்கு (இன்றைய இலங்கை ரூபாவின் பெறுமதியில் 8,000 கோடி ரூபாய்) இறக்குமதி செய்யப்பட்டுள்து. கடந்த கொரோனா நெருக்கடிக்கு பின்பு சர்வதேச சந்தையில் கோதுமையின் விலை 2 மடங்காக அதிகரித்துள்ளது. அது தொடர்ந்தும் அதிகரிக்கலாம். தற்போது அரசாங்கத்திடம் டொலர்கள் குறைவாக இருப்பதால் இதன் இறக்குமதியை செய்வது பாரிய சவாலாக இருக்கப்போகின்றது.

2008ஆம் ஆண்டு வந்த உலக உணவு நெருக்கடியின் போது கோதுமையின் விலை தற்போது உள்ளதைவிட உயர்வடைந்திருந்தது. ஆனால் அந்த நேரம் அரசாங்கம் 402 மில்லியன் அமெரிக்க டொலருக்கு கோதுமையை இறக்குமதி செய்திருந்தது. காரணம் அரசாங்கத்திடம் தற்போது ஏற்பட்டுள்து போன்ற அன்னிய செலாவணி நெருக்கடி அப்பொழுது இருக்கவில்லை. இதனால் அரசாங்கம் தனது வரியை பயன்படுத்தி கோதுமை மாவினை மானிய விலைக்கு வழங்கக்கூடியதாக இருந்தது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு வாரா வாரம் சடுதியாக அதிகரித்துச் செல்வதால் பாணின் விற்பனைவிலையும் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. கடந்தவாரம் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை குறித்த பேக்கரிகளே தீர்மானிக்கலாம் எனும் அறிவித்தலை தொடர்ந்து எதிர்காலத்தில் இந்த விலைகள் என்னவாக மாறுமோ எனும் பதட்டம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

அதே நேரம் பாண் உற்பத்தியாளர்களும் நெருக்கடி மத்தியில்தான் உற்பத்தி செய்கிறார்கள். குறிப்பாக ஒரு இறாத்தல் பாணின் உற்பத்திச் செலவை எடுத்துப் பார்த்தால் தற்போது 65 - 70 ரூபாய் ஆகிறது அதில் மாவிற்கு மட்டுமே ரூபாய் 40 செலவாகிறது. தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மா கிடைப்பதால் பாணின் உற்பத்தியை தொடர்ச்சியாக ஒரே அளவில் பேணுவதற்காக கூட்டுறவின் பேக்கரிகள் ஏனைய உற்பத்திகளை குறைவாக உற்பத்தி செய்கிறார்கள்.

இலங்கையில் கோதுமை இறக்குமதி செய்ய ஆரம்பித்த பொழுது பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாகவே அரசாங்கம் வினியோகம் செய்தது. 1970ஆம் ஆண்டுகளில் பண்டகசாலைகளாக இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் பல பேக்கரிகளாக மாறி பாண் உற்பத்தியை செய்ய தொடங்கின. யாழ்ப்பாணத்திலும் பண்டத்தரிப்பு பாலநோக்கு கூட்டுறவுச்சங்கம் 1975 ஆம் ஆண்டு பேக்கரியை உருவாக்கி இன்றுவரை உற்பத்திகளை செய்துவருகிறது.

யுத்தத்திற்கு பின்பு வடமாகாணத்திற்கு தேவைப்படும் பாணின் உற்பத்தியில் சிறிய அளவையே கூட்டுறவுகள் செய்து வருகின்றன. குறிப்பாக பண்டத்தரிப்பு, நெல்லியடி, கைதடி, சங்கானை, கரச்சி வடக்கு, அக்கராயன் மற்றும் வவுனியா தெற்கு ஆகிய இடங்களிலே தற்போது கூட்டுறவின் பேக்கரிகள் இயங்கி வருகின்றன. இவை தனியார் பேக்கரிகளைவிட சற்று குறைந்த விலைக்கே தமது உற்பத்தி பொருட்களை விற்பனை செய்துவருகின்றன. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி அவர்களையும் பாதிப்பதால் எவ்வாறு இந்தப் பிரச்னையை கையாளப்போகிறார்கள்?

**உணவுமுறையில் அரசியல்**

இலங்கையிலோ அல்லது வடக்கிலோ மக்களின் உணவுமுறை அரிசி, பருப்பு வகை, கிழங்கு வகை மற்றும் பழங்களை அடிப்படையாக கொண்டதாகவே இருந்தது. இன்றும் கிராமப்புறங்களில் மக்கள் அரிசி சார்ந்த உணவையே மூன்று வேளையும் உள்ளெடுக்கிறார்கள். ஆனால் நகரப்புறங்களிலும், பெருந்தோட்டங்களிலும் பாண் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு மக்கள் தங்களின் வேலைச்சுமை மற்றும் குடும்ப அமைப்பு முறைகளை கருத்தில் கொண்டு இலகுவான முறையில் பாணை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்ததால் அவர்களின் உணவுமுறையில் பாண் முக்கிய இடத்தை பிடித்துவிட்டது.

கோதுமை மாவின் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் இரண்டாம் உலக யுத்த நிறைவில் அமெரிக்காவில் கோதுமையின் உற்பத்தி அபரிமிதமாக இருந்ததால் அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு PL 480 திட்டத்திற்கூடாக மானிய அடிப்படையில் கோதுமை மாவை வழங்கியது. இத் திட்டத்திற்கூடாக பெருமளவில் அமெரிக்காவில் இருந்தும் குறைந்த அளவில் அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பா போன்ற பகுதிகளில் இருந்தும் மாவாக இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை 1980களில் பிறிமா மா ஆலை ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து கோதுமை தானியமாக இறக்குமதி செய்யப்பட்டு பிறிமா ஆலைக்கு அனுப்பி பின் மாவாக பெறப்படுகிறது.

இன்றும் கோதுமை மா பலரால் அமெரிக்கன் மா என்று அழைக்கப்படுகிறது. ஆரம்ப காலங்களில் மக்கள் பசை தயாரிப்பதற்கு கோதுமை மாவை பயன்படுத்தினார்கள். உணவு தயாரிப்பதற்கு மிக அரிதாகவே பயன்படுத்தினார்கள். நாளடைவில் கோதுமை சார்ந்த உணவு முறைக்கு மக்கள் பழகிவிட்டனர்.

முதலாளித்துவ நாடுகள் மக்களின் உணவுமுறைகளில் கூட மாற்றங்களை ஏற்படுத்தி தம்மில் தங்கிவாழ்வதற்கான சூழலை உருவாக்கியிருந்தது. அதாவது உணவு என்பது அத்தியாவசியமானது. இறக்குமதி சார்ந்து எமது உணவுமுறை இருக்குமானால் நெருக்கடிகள் வரும் போது மீண்டும் அவர்களிடம் கையேந்த வேண்டிய சூழல் ஏற்படும் அத்துடன் தொடர்ந்தும் நாம் அவர்களால் சுரண்டப்படுவதற்கும் பின்னடைவான நிலையிலே இருப்பதற்கும் ஒரு ஆயுதமாக இதைப்பயன்படுத்துகிறார்கள். உணவுகளில் கூட சர்வதேச அரசியல் சார்ந்த வரலாறு இருக்கிறது. அது எவ்வாறு பல வருடங்களுக்கு முன்பே திட்டமிட்டு முன்கொண்டு போகப்படுகிறது என்பதை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

**எதிர்கால முன்னெடுப்புகள்**

உணவுமுறை என்பது மக்களின் விருப்பத்துடன் தொடர்புபட்டதாக இருந்தாலும் அந்த விருப்பங்கள் சந்தை சக்திகளாலே தீர்மானிக்கப்படுகிறது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த பிரச்னைக்கு எதிர்காலத்தில் எவ்வாறான மாற்றுத் தீர்வுகளை நாடலாம்? தொடர்ந்தும் தற்காலிக தீர்வுகளை நாடி பாணில்தான் எமது சமூகம் தங்கிவாழப்போகிறது என்றால் அதற்கு அரசாங்கம் தாமாகவே கோதுமை மாவை இறக்குமதிசெய்து வெதுப்பகங்களுக்கு கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்கி பாணின் விலையையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

அல்லது எமது உணவு முறைகளில் மாற்றங்களை கொண்டுவந்து நிரந்தர தீர்வுகளை நாவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக இருந்தால் அதற்கான வாய்ப்புக்களை சமூக மட்ட அமைப்புகள் உருவாக்கி கொடுக்க வேண்டும். கூட்டுறவுச்சங்கங்கள் தானிய உற்பத்தி, அரிசி உற்பத்தியை அதிகரிப்பதற்கும் வினியோகிப்பதற்குமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக எமது உணவு முறையில் உள்ள குறைபாடுகளை விளங்கி அதற்கு நீண்டகால தீர்வுகளை காணும்வகையில் விவசாய உற்பத்திகளையும் ஆராயவேண்டும். ■



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

1. பின்வரும் பந்தியை வாசிக்க.

வானில் அங்குமிங்கும் பறந்து திரியும் பறவைகளின் கானம் சூழலை இனிமையாக்குகிறது. மெல்லிய குளிர்காற்று மேனியைச் சில்லிட வைக்கிறது. தோட்டத்துப் பூக்கள் மலர்ந்து மணம் பரப்புகின்றன. வண்ணத்துப் பூச்சிகள் தேனைப் பருகப் பூக்களை நாடி வருகின்றன. முத்துக்கள் போன்ற பனித்துளிகள் இலைகளில் படிந்திருக்கும் காட்சி மனதுக்கு மகிழ்ச்சி தருகிறது. இளஞ்சூரியனின் பொன்னொளிபட்டு உலகு ஒளிமயமாகிறது.

- பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) எது சூழலை இனிமையாக்குகிறது? : ....................

(ii) வண்ணத்துப் பூச்சிகள் பூக்களை நாடி வரக் காரணம் யாது?
: ....................

(iii) முத்துக்களுக்கு ஒப்பாகக் கூறப்பட்டவை எவை? : ....................

(iv) இணைமொழி ஒன்றினைத் தருக. : ....................

(v) இன்பம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. : ....................

(vi) உலகு எதனால் ஒளிமயமாகிறது?
: ....................

2. உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) உண்டான் (2) பாடியது (3) ஆடுகின்றனர்

3. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

எமது / வளர்ச்சி / பொது அறிவு / பத்திரிகைகள் / அடைகிறது / வாசிப்பதால்

....................

....................

4. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு **சரியாயின்** (✓) எனவும் **பிழையாயின்** (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் அடையாளமிடுக.

(i) குளத்திலே மீன்கள் நீந்துகின்றன. (............)
(ii) மின்சாரம் தடைப்பட்டதால் மின் விளக்குகள் அணைந்தன. (............)
(iii) சிறிய சிறிய அருவிகளின் பாய்ச்சல் அழகாக இருந்தன. (............)
(iv) நட்சத்திரங்கள் வானத்தை அலங்கரித்தது. (............)

5. (i) பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கிட்டாதாயின் .................... மற

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

கூடிய ஆசை துன்பத்தைத் தரும்

....................

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

மா பலா வாழை என்பன முக்கனிகளாகும்

7. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ஆசிரியர் மாணவர்களுக்கு (அறிவுரை / அரிவுரை) கூறினார்.
(ii) கழிவு நீர் தேங்கி நின்றதால் (துர்னாற்றம் / துர்நாற்றம்) வீசியது.
(iii) களைகள் பயிர்களுக்கு (ஊரு / ஊறு) விளைவிக்கும்.

8. பின்வரும் வாக்கியத்தை எதிர்காலத்தில் எழுதுக.

சூரியன் உதயமாகிறது.

....................

## விடைகள்

1. (i) *பறவைகளின் கானம்*
(ii) *தேனைப் பருக*
(iii) *பனித்துளிகள்*
(iv) *அங்குமிங்கும்*
(v) *மகிழ்ச்சி*
(vi) *இளஞ்சூரியனின் பொன்னொளிபட்டு*

2. (1) *உண்டான்*

3. *பத்திரிகைகள் வாசிப்பதால் எமது பொது அறிவு வளர்ச்சி அடைகிறது.*

4. (i) ✓
(ii) ✓
(iii) ×
(iv) ×

5. (i) *வெட்டென*
(ii) *பேராசை பெரு நட்டம்*

6. *மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும்.*

7. (i) *அறிவுரை*
(ii) *துர்நாற்றம்*
(iii) *ஊறு*

8. *சூரியன் உதயமாகும்.*

# அரசுக்கு எதிராக சஜித் அணி தீவிர பரப்புரை

## துண்டுப் பிரசுரமும் விநியோகம்





கொழும்பு, டிசெ. 29

நாட்டு மக்கள் நெருப்புடன் கூடிய துன்பத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து தயாரிக்கப்பட்ட "குடும்ப ஆட்சி நாட்டை அழிக்கும்" என்ற துண்டுப் பிரசுரத்தை அம்பலாந்தோட்டைப் பகுதியில் விநியோகம் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டு மக்கள் நெருப்புக்குப் பதிலாக நெருப்பால் எரிகின்றார்கள். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் டொலர் மாபியாவின் கைப்பாவை .

அவர் நாட்டின் அனைத்துப் பிரஜைகளுடனும் ஏற்றுமதியாளர்களுடனும் விளையாடுகின்றார். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்கும் பணியை முன்னெடுத்த ஒருவர் பதவி விலகியுள்ளார். எனினும், நாட்டின் பொருளாதாரத்தை அழித்த குற்றத்துக்கான பொறுப்பில் இருந்து அவர்களால் விடுவிக்க முடியாது" - என்றார். (இ)

---



## போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 29

35 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, அவிசாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவிசாவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானியன்கம பிரதேசத்தில், அவிசாவளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ - கே)

# இலங்கையில் புதிய திரிபுகள் உருவாகுவதற்கான சாத்தியம்



## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 29

**கொரோனா நோய் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்று தற்போதே ஒரு முடிவுக்கு வரமுடியாது என்றும், எதிர்காலத்தில் புதிய திரிபுகள் உருவாகுவதற்கான சாத்தியம் இருக்கின்றது என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

ஆகவே, மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளரும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமுமான விசேட வைத்திய நிபுணர் ஹேம்நத ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் பிரச்னைகள் இருக்குமாக இருந்தால் அந்தப் பிரச்னைக்கு தீர்வைப் பெற்றுக்கொண்டு முடிந்தளவு விரைவாக மூன்றாம் கட்டத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டால் மாத்திரமே நாட்டிலிருந்து கொரோனா நிலைமையை இல்லாதொழிக்க முடியும்.

சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றியும் நோய் நிலைமை பரவலடையுமாக இருந்தால், இந்த நிலைமை முடிவில்லாமல் தொடர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. டெல்டா தொற்று பரவலடைய ஆரம்பித்தபோதும் இத்துடன் இந்த தொற்று பரவலடையாது என்பதே பல தரப்பினரின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால், புதிதாக ஒமிக்ரோன் என் புதியவொரு திரிபு பரவலடைய ஆரம்பித்தது.

ஆகவே, எதிர்காலத்திலும் புதிய திரிபுகள் ஏற்படாது என்று உறுதியாகக் கூற முடியாது. என்றாவதொரு நாள் தொற்று நிறைவுக்கு வந்தால் மாத்திரமே கொரோனா நோய் நிலைமை முடிவடைந்து விட்டது என்று கூற முடியும். அவ்வாறு இல்லாமல் தற்போதே புதிய திரிபுகள் உருவாகாது என்று கூற முடியாது. ஆகவே, ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்" - என்றார். (இ)

---

## பலாக்காய் விலையும் அதிகரிப்பு



கொழும்பு, டிசெ. 29

ஒரு கிலோகிராம் பலாக்காயின் விலை 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காய்கறிகளை விட மலிவாக இருந்த பலா, தேங்காய், வாழைப்பழம், சேனைக்கிழங்கு ஆகியவற்றின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

இதுவரை 20 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பலாக்காயின் மொத்த விற்பனை விலை தற்போது 100 ரூபாவாகவும், பலாக்காய் கிலோ ஒன்றின் விலை 200 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. மேலும் ஒரு கிலோ வாழைப்பழத்தின் விலை 150 ஆக அதிகரித்துள்ளது. (இ)

---

## மேலும் ஒரு தொகை பைசர் தடுப்பூசிகள்

கொழும்பு, டிச. 29

மேலும் ஒரு தொகை பைசர் தடுப்பூசிகளை ஏற்றிய விமானம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

அதற்கமைய, மேலும் ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 770 பைசர் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.




அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் முற்பதிவு செய்யப்பட்ட தடுப்பூசிகள், கொழும்பிலுள்ள மத்திய ஔடதங்கள் களஞ்சிய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சாதனை மாணவி தர்ஷிகாவை நேரில் கௌரவித்த தென்கிழக்குப் பல்கலை



அக்கரைப்பற்று, டிசெ. 29

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வின்போது 13 தங்கப் பதக்கங்களை பெற்று சாதனை படைத்த அக்கரைப்பற்றைச் சேர்ந்த மருத்துவர் தணிகாசலம் தர்ஷிகாவைக் கௌரவிக்கும் நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பதிவாளர் உட்பட பல்கலைக்கழக உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழக உபவேந்தரின் அழைப்பின்பேரில் பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்திருந்த சாதனை மாணவி தர்ஷிகாவுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் பொன்னாடை போர்த்திக் கௌரவமளித்தது. இதன்போது தர்ஷிக்காவுக்கான நினைவுச் சின்னத்தை உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ், எதிர்காலத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் அமையப்பெற வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக் காட்டியதுடன் இவரைப் போன்ற சாதனையாளர்களின் ஒத்துழைப்பு அதற்கு அவசியமானது எனவும் குறிப்பிட்டார்.

இந்தப் பிராந்தியத்திலுள்ள உயர் கல்வி நிறுவனங்களுள் ஒன்று என்ற வகையில் தர்ஷிகா போன்ற சாதனையாளர்களைக் கௌரவிப்பதில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மகிழ்ச்சியுறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாதனை மாணவி தர்ஷிகா, தன்னைக் கௌரவித்த பல்கலைக்கழக உபவேந்தருக்கு நன்றி கூறியதுடன் தனது சாதனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

குடும்பம், ஆசிரியர்கள், நல்ல நண்பர்கள் மற்றும் விடா முயற்சி என்பன தனது சாதனைக்கு வித்திட்டதையும் அவர் நினைவுகூர்ந்தார். (இ)



## வியன்னா பேச்சுக்கு முன்னர் பொருளாதாரத் தடை நீக்கம்

### வலியுறுத்துகின்றது ஈரான்

தெஹ்ரான், டிசெ. 29

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை வியன்னாவில் இந்த வாரம் மீண்டும் தொடங்கவுள்ள நிலையில் தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் நீக்க வேண்டும் என ஈரான் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப்பதை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் ஈரான் கோரியுள்ளது.

பொருளாதாரத் தடையால் எங்கள் நாட்டின் எண் ணெய் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரானின் மசகு எண்ணெய் தடையின்றி விற்பனை செய்யப்பட வேண்டும். அணுசக்தி ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின் அடுத்த கட்டமாக எங்கள் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படவேண்டும் என தெஹ்ரானில் செய்தி யாளர்களிடம் பேசிய ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹூசைன் அமிரப்துல்லாஹியன் தெரிவித்தார்.

ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் மீதான தடைக்குப் பதிலாக பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வகை செய்யும் ஒப்பந்தம் ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு கையொப்பமானது.

ஆனால், அந்த ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக கடந்த 2018 ஆம் ஆண்டு அப்போ தைய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். மேலும், ஈரான் மசகு எண்ணெய் விற்பனை செய்வதற் குத் தடை விதிப்பது உள்ளிட்ட பொருளாதாரத் தடைகளையும் விதித்தார். இந்தத் தடையைத் தொடர்ந்து, ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் பெறும் ஒப்பந்தத்தை சர்வதேச எண் ணெய் நிறுவனங்கள் இரத்து செய்தன. இதனால் அந்த நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்ப டைந்துள்ளது.

இந்நிலையில் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத் தில் உள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்தும் வகை யில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளன.

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் இந்த மாத ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை தொடங்கிய நிலையில், புதிய கோரிக்கைகளை ஈரான் எழுப்பியதால் ஒத்திவைக் கப்பட்டது. இப்போது மீண்டும் பேச்சு தொடங்கவுள்ள நிலையில் தங்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கவேண்டும் என ஈரான் வலியுறுத்தியுள்ளது.(அ)

# மேலும் பல பெருந்தொற்றுக்களை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்

### ஐ.நா. பொதுச் செயலர் எச்சரிக்கை

நியூயோர்க், டிசெ. 29

கொரோனா என்பது உலகம் சந்திக்கும் கடைசி பெருந்தொற்று அல்ல என்று ஐ.நா. பொதுச்செய லாளர் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் எச்சரித் துள்ளார்.

கொரோனா போன்று இன்னும் நிறைய பெருந்தொற்றுகள் வர லாம். கொரோனாவைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்கும் அதே சமநேரத்தில் அடுத்த பெருந் தொற்று நோய்களை எதிர்கொள்ள வும் தயாராக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

டிசெம்பர் 27 உலக பெருந் தொற்று தயாராதல் தினத்தை யொட்டி வெளியிட்ட டுவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

உலக பெருந்தொற்று தயாராதல் தினத்தில் பெருந்தொற்றுகள் குறித்து உரிய கவனம் செலுத்த வேண்டும். அத்துடன், இவற்றைக்



கட்டுப்படுத்தும் முயற்சிக்கு உலக நாடுகள் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் எனவும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ட ரெஸ் கோரிக்கை விடுத்தார்.

(அ)

## பிரிட்டிஷ் மகாராணியின் உயிருக்கு அச்சுறுத்தலா?

லண்டன், டிசெ. 29

பிரிட்டிஸ் மகாராணி கிறிஸ்மஸ் கொண்டாட்டங் களில் ஈடுபட்டிருந்தவேளை வின்ட்சர் கோட்டைக்குள் ஆயுதங்களுடன் நுழைய முயன்ற ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் கருத்து தெரிவிக்கை யில்,

கடந்த சனிக்கிழமை ஆபத்தான ஆயுதங்களுடன் 19 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் உள்ளே நுழைய முயன் றார் . ஆனால் அவர் உள்ளே நுழைந்ததும் பாதுகாப்பு பொறிமுறைகள் உடனடியாக செயற்பட ஆரம்பித்தன.

இதனால் அவரால் கட்டடங்கள் எவற்றிற்குள்ளும் நுழைய முடியவில்லை. சந்தேகநபர் தடுத்து வைக்கப் பட்டு விசாரிக்கப்படுகிறார். அரசகுடும்பத்துக்கு இது குறித்து அறிவித்துள்ளோம்.

பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி நுழைந் தமை மற்றும் தாக்குதலிற்கு பயன்படுத்தக்கூடிய ஆயு தத்தை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் நபருக்கெதிரான வழக்கு தொடரப்பட்டுள்ளது-என்ற னர். (அ)





## பிரேஸிலில் வெள்ளம்; 18 பேர் உயிரிழந்தனர்

### 280 க்கும் மேற்பட்டோர் காயம்

பிரேசிலியா, டிசெ. 29

பிரேஸிலின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட வெள் ளப்பெருக்கு காரணமாக குறைந்தது 18 பேர் உயிரிழந் துள்ளனர். 280க்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளனர்.

35,000க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று பாஹியாவின் சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாஹியா மாநிலம் முழுவதும் உள்ள கிட்டத்தட்ட 40 நகரங்களை வெள்ளம் பாதித்துள்ளது என்று ஆளுநர் ரூய் கோஸ்டா ஊடகங்களிடம் கூறினார்.

பிரேஸிலின் வானிலை மற்றும் இயற்கை பேரிடர் கண்காணிப்பு முகவர் பாஹியாவில் கூடுதல் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக எச்சரித்துள்ளது.

இதம்பே நகரில், கனமழை காரணமாக சனிக்கிழமை பிற்பகுதியில் ஒரு அணை உடைந்தது. மேலும் வெள் ளப்பெருக்கு ஏற்படும் என்ற அச்சத்தையும் கவலையை யும் எழுப்புகிறது என்று தேசிய ஊடகம் தெரிவித்துள் ளது.

# தளர்வான கட்டுப்பாடுகளே பிரான்ஸ் அரசால் அறிவிப்பு

### பாடசாலைகள் மூடப்படாது! வருட இறுதி நாள் ஊரடங்கும் இல்லை

பாரிஸ், டிசெ. 29

எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாகத் தளர்வான சில கட்டுப் பாடுகளையே அரசு அறிவித் திருக்கிறது. குறிப்பாகப் பாட சாலைகளைத் திங்களன்று திறக் கின்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றும் வருட இறுதி நாளான டிசெம்பர்31ஆம் திகதி ஊரடங்கு உத்தரவு எதுவும் இருக்காது என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

அதிபர் மக்ரோன் தலைமை யில் நடைபெற்ற சுகாதாரப் பாதுகாப்புச் சபைக் கூட்டத் தில் எடுக்கப்பட்ட தீர்மானங்க ளைப் பிரதமரும் சுகாதார அமைச்சரும் நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாட்டில் அறி வித்தனர். தொற்றாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்த கார ணத்துக்காகத் தனிமைப்படுத் தலில் இருக்கின்ற காலம் குறைக்கப்படவுள்ளது.

அதன் விவரங்கள் இந்த வார இறுதியில் வெளியிடப் படும் என்றும் பிரதமர் தெரி வித்தார்.

புத்தாண்டு பிறக்கும் சமயத்தில் ஊரடங்கு இருக் காது என்றாலும் நின்றவாறு நடத்தப்படுகின்ற களியாட் டங்கள், இசை நிகழ்ச்சிகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அருந்தகங்களில் இருக்கை களில் அமர்ந்து மட்டுமே உண் ணவும் குடிக்கவும் முடியும் என்ற விதியும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. சினிமா, தியேட்டர்கள், விளையாடும் இடங்கள், பொதுப் போக்கு வரத்து போன்றவற்றில் மென் பானங்களை அருந்துதல், உண் ணுதல் போன்றன தடைசெய் யப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் சபைக் கூட்டத் தில் எடுக்கப்பட்ட ஏனைய



முடிவுகள் வருமாறு :

- முதல் இரண்டு ஊசிகளுக் குப் பிறகு மூன்றாவது டோஸ் ஏற்றிக் கொள்வதற்கான கால இடைவெளி மூன்று மாதங்க ளாகக் குறைக்கப்படுகிறது. நாளை செவ்வாய்க்கிழமை முதல் அது அமுலுக்கு வருகிறது.
- போலி சுகாதாரப் பாஸ் களைப் பயன்படுத்துவோருக்கு எதிரான தண்டனைகள் கடுமை யாக்கப்படவுள்ளன.
- வாரத்தில் குறைந்தது மூன்று நாட்கள் வீட்டில் இருந்து பணியாற்றுவது ஜன வரி 3ஆம் திகதி முதல் கட்டாயமாக்கப்படுகிறது. குறைந்தது மூன்று வாரங்க ளுக்கு அது நடைமுறையில் இருக்கும்.
- ஒன்று கூடுவோரது எண் ணிக்கை மீண்டும் வரையறை செய்யப்படுகிறது. உள் பகுதி களில் 2,000 பேருக்கும் வெளிப் புறங்களில் 5,000 பேருக்கும் அதிக எண்ணிக்கையில் ஒன்று கூடுவதற்குத் தடை விதிக்கப் படுகிறது.
- அரசியல் கூட்டங்கள் மற் றும் நிகழ்வு களில் ஒன்று கூடு வதற்கு எண்ணிக்கைக் கட்டுப் பாடுகள் எதுவும் இருக்காது.
- நின்றுகொண்டு செய்யப் படுகின்ற களியாட்டங்கள் மற்றும் இன்னிசை நிகழ்வுகள் தடை செய்யப்படு கின்றன. புதுவருட வாழ்த்து வரவேற்பு நிகழ்வுகள் அனைத்தும் ஜன வரி மாதம் முழுவதும் தடை செய்யப்பட்டிருக்கும். (அ)



## இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தென்னாபிரிக்கா தடுமாற்றம்!

செஞ்சூரியன், டிசெ. 29

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி 21 ஓவர்கள் நிறைவில் 61 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறுகின்றது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதல் போட்டி ஞாயிற்றுக்கிழமை செஞ்சூரியனில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து 272 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் மழையால் கைவிடப்பட்ட நிலையில் மூன்றாம் நாளான நேற்று ஆட்டம் தொடர்ந்தது. கே. எல். ராகுல் 122 ஓட்டங்களுடனும், அஜிங்கிய ரஹானே 40 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

ஆட்டம் தொடங்கிய சில நிடங்களிலேயே கே. எல். ராகுல் 123 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அஜிங்கிய ரஹானேயும் 48 ஓட்டங்கள் வரையே தாக்குப்பிடித்தார். அதன் பின்னர் வீரர்கள் இரு வரிசை இலக்க ஓட்டத்தை எட்டமுடியாமல் விக்கெட்களை பறிகொடுத்தனர். பும்ரா மட்டுமே 14 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதனால், 327 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இந்திய அணி.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா 6 விக்கெட்களையும், ரபாடா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்க அணி.

தொடக்கம் கொடுத்த டீன் எல்கர் ஓர் ஓட்டத்துடன் பும்ராவின் பந்தில் வீழ்ந்தார். எய்ட்ன் மார்க்ரம் 13, கீகன் பீற்றர்சன் 15, வான் டெர் டுசென் 3 என சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

நேற்று மாலைநேர தேநீர் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது தென்னாபிரிக்க அணி 21 ஓவர்கள் நிறைவில் 61 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தடுமாறியது. பவுமா 16 ஓட்டங்களுடனும், குயின்ரன் டி கொக் 8 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

இந்தியாவின் பந்துவீச்சில் முஹமட் சமி 2 விக்கெட்களையும், பும்ரா, சிராஜ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# ஆஷஷ் டெஸ்ட் தொடரை வென்றது அவுஸ்திரேலியா!

மெல்பர்ன், டிசெ. 29

இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியை இனிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றி கொண்ட அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரை கைப்பற்றியது.

இரண்டாம் நாளான நேற்று முன்தினம் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 31 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்களை இழந்து தடுமாறியது. ஜோ ரூட் 12, பென் ஸ்ரோக்ஸ் 2 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது, ரூட் - ஸ்ரோக்ஸ் இணை தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. முதல்நாளில் 3 பந்துகளில் இரு விக்கெட்களை கைப்பற்றி அசத்திய பொலன்ட் நேற்றைய நாளிலும் ஆதிக்கம் செலுத்தினார்.

எனினும், ரூட் - ஸ்ரோக்ஸ் இணை பொறுமையாக ஆட முற்பட்டது. எனினும், அவர்களின் நிதானத்தை விரைவிலேயே முடிவுக்குக் கொண்டு வந்தார் மிற்செல் ஸ்ரோர்க். பென் ஸ்ரோக்ஸ் 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போல்ட் ஆகி வெளியேறினார்.



அடுத்து வந்த பெயர்ஸ்ரோ 5 ஓட்டங்கள், ஜோ ரூட் 28 ஓட்டங்கள், மார்க் வூட், ஒல்லி றொபின்சன் ஆகியோர் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் பொலன்ட்டின் வேகத்தில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

27.4 ஓவர்களில் 68 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இங்கிலாந்து அணி.

ஸ்கொட் பொலன்ட் 6 விக்கெட்களையும், மிற்செல் ஸ்ரார்க் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இதனால், இனிங்ஸாலும் 14 ஓட்டங்களாலும் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 -0 என்ற ரீதியில் இன்னமும் இரு போட்டிகள் மீதமிருக்கும் நிலையில், தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

போட்டியின் நாயகனாக ஸ்கொட் பொலன்ட் தெரிவானார்.

இந்தத் தொடர் வெற்றியின் மூலம், இதுவரை நடைபெற்ற 72 தொடர்களில் 34 வெற்றிகளை பெற்று முன்னிலை வகிக்கிறது. இங்கிலாந்து 32 வெற்றிகளைப் பெற்றுள்ளதுடன், 6 தொடர்கள் சமநிலையில் முடிவடைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை வருகிறது சிம்பாப்வே அணி!

கொழும்பு, டிசெ. 29

சிம்பாப்வே கிரிக்கெட் அணி 2022 ஜனவரியில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது.

தொடருக்காக சிம்பாப்வே அணி 2022 ஜனவரி 10 ஆம் திகதி நாட்டை வந்தடையும். மூன்று போட்டிகளும் கண்டி பல்லேகலை சர்வதேச மைதானத்தில் பகல் - இரவு போட்டியாக இடம்பெறவுள்ளது.

முதலாவது போட்டி 16ஆம் திகதியும், இரண்டாவது போட்டி 18ஆம் திகதியும், மூன்றாவது போட்டி 21ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ஐ)



## ஓய்வு பெற்றார் ஜீவன் மெண்டிஸ்!

கொழும்பு, டிசெ. 29

இலங்கை கிரிக்கெட் வீரர் ஜீவன் மெண்டிஸ் சர்வ தேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள ஜீவன் மெண்டிஸ்,

இது இலங்கை கிரிக்கெட்டுடனான ஒரு நம்பமுடியாத பயணமாகும். 2010ஆம் ஆண்டு முதல் நான் அதில் ஓர் அங்கமாக இருப்பதில் பெருமையடைகிறேன். இந்த அற்புதமான பயணம் முழுவதும் நான் கற்றுக்கொண்ட பல மதிப்புமிக்க பாடங்கள் மற்றும் அழகான நினைவுகள். எனது பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் சக வீரர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். நான் எப்போதும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்", என்று கூறியுள்ளார்.

இலங்கை அணிக்காக அவர் 58 ஒருநாள் போட்டிகளில் 636 ஓட்டங்களையும், 28 விக்கெட்களையும் பெற்றுள்ளார். அத்துடன், 22 இருபது - 20 போட்டிகளில் 207 ஓட்டங்களை எடுத்ததுடன், 12 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

மேலும், ஜீவன் மெண்டிஸ் இறுதியாக 2019 ஒருநாள் உலகக் கிண்ணத்தின் போது இலங்கை அணியில் விளையாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 2021இன் சிறந்த டெஸ்ட் வீரர்; பரிந்துரை பட்டியலில் திமுத்!



டுபாய், டிசெ. 29

2021ஆம் ஆண்டு சர்வ தேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) சிறந்த டெஸ்ட் வீரர் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டவர்கள் பட்டி யலில் இலங்கை அணியின் திமுத் கருணாரத்னவும் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன இந்த ஆண்டு மொத்தமாக 7 போட்டிகளில் விளையாடி 69.38 சராசரியில் 902 ஓட்டங்களை குவித்துள்ளார். இதில் நான்கு சதங்களும் அடங்கும்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஜொகன்னர்ஸ் பேர்க்கில் ஒரு சதம், பல்லே கலவில் நடந்த பங்களா தேஷுக்கு எதிரான தொட ரில் ஓர் இரட்டை சதம் உட்பட இரண்டு சதங்கள் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக காலியில் ஒரு சதம் என்பன கருணாரத்னவால் இந்த ஆண்டு அடிக்கப்பட்டன.

திமுத் கருணாரத்ன தவிர, சிறந்த வீரருக்கான பரிந்துரை பட்டியலில் இங்கி லாந்தின் ஜோ ரூட், இந்தியாவின் ரவிச்சந்திரன் அஷ்வின் நியூசிலாந்தின் கைல் ஜமிசன் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர். (ஐ)

ஈழநாடு



# காஸ் தட்டுப்பாட்டுக்கு நுகர்வோரின் பாதுகாப்பும் காரணம்!

## இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண சுட்டுக்காட்டு

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டுக்கு நுகர்வோரின் பாதுகாப்பும் ஒரு காரணம் என்று கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சமையல் எரிவாயுக்களின் தரம் தொடர்பில் பரிசோதிக்கும் அதிகாரம் இலங்கை கட்டளைகள் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. சமையில் எரி



வாயு சிலிண்டர்களின் தட்டுப்பாடுக்கு நுகர்வோரின் பாதுகாப்பும் ஒரு காரணம்.

சமையில் எரிவாயுக்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, சந்தைகளுக்கு விநியோகிக்கும் வரையில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினர் அது தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் தற்போது சமையில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நுகர்வோரின் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுவதும் தட்டுப்பாட்டுக்குக் காரணம். சமையல் எரிவாயு தட்டுப் பாடுகளை நிவர்த்தி செய்ய அந்த நிறுவனங்கள் விரை வாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார். (இ - கே)



# வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டாம்!

## ஐக்கிய காங்கிரஸ் கட்சியினர் எதிர்ப்பு

மட்டக்களப்பு, டிசெ. 29

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவித்து ஐக்கிய காங்கிரஸ் கட்சி எதிர்ப்பை வெளியீட்டுள்ளது.

இதற்கமைய ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கல்குடாத் தொகுதி அமைப்பாளர் சல்மான் வஹாப் தலைமையில் மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பல்வேறு சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

வடக்கு, கிழக்கை இணைப்பதற்குத் துணைபோகும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் துரோகத்தனத்தைக் கண்டிக்கின்றோம், கிழக்குத் தலைமைகளின் அனுமதியற்ற தீர்வுகளை ஏற்கமாட்டோம், வடக்கு, கிழக்கை இணைக்காதே போன்ற வாசகங்களுடன் அவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மேலும், வடக்கு - கிழக்கு இணைவுக்கு எதிராக ஐக்கிய காங்கிரஸ் கட்சியால் தேசிய மட்டத்தில் ஊடக மாநாடுக ளும், கண்டன ஆர்ப்பாட்டங்க ளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள என்று கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார். (இ)

# மக்களின் இரத்தத்தை உறிஞ்சுபவர் இரத்தப்போக்கு ஏற்பட்டே மரணிப்பர்

## சாபம் இடுகின்றார் சமீர பெரேரா



**கொழும்பு, டிசெ. 29**

**"மக்களின் இரத்தத்தை உறிஞ்சுபவர்கள் இரத்தப்போக்கு ஏற்பட்டே மரணிப்பார்கள்."**

- இவ்வாறு ஐக்கிய பிரஜைகள் ஒன்றியத்தின் ஒருங்கமைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த இரு தினங்களுக்குள் அரசிலுள்ளவர்கள் உட்கொண்ட உணவு தொடர்பான விடயங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

அரசில் சுவாசிப்பவர்கள் இருப்பார்களாயின் அவர்கள் உட்கொண்ட உணவுகள் சமிபாடு அடையுமா என்றே கேட்க விளைகின்றோம்" - என்றார். (இ)

# சன்ஷைன் சுத்தா கொலையுடன் நேரடி தொடர்புடைய மற்றுமொருவர் கைது!

கொழும்பு, டிச. 29

பிரபல பாதாளக்குழு உறுப்பினர் சன்ஷைன் சுத்தா எனப்படும் அமில பிரசங்க ஹெட்டிஹேவாவை கொலைசெய்வதற்காக டிங்கர் லசந்த எனப்படும் ஹேவாதுனுவிலகே லசந்தவுடன் வாகனத்தில் பிரவேசித்த சந்தேகநபர், ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணை பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தம்புத்தேகம பிரதேசத்தில் வைத்து இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவ்வேளையில் அவரிடமிருந்து 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் ஓட்டோ என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் மட்டக்குளி - சமிட்புர பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சன்ஷைன் சுத்தா கடந்த செப்ரெம்பர் 3 ஆம் திகதி கொடவில பகுதியில் வாகனத்தில் பயணித்துகொண்டிருந்த போது, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த நவம்பர் 25 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட டிங்கர் லசந்த, மறைத்து வைத்துள்ள ஆயுதங்களைக் காண்பிக்க அழைத்துச் செல்லப்பட்ட போது பொலிஸாரின் துப்பாக் கிச்சூட்டில் உயிரிழந்தார். (இ)

# மக்கள் ஆணையை மதித்து ஆட்சி நடத்துகின்றது அரசு

## இப்படிக் கூறுகின்றார் மதுர விதானகே எம்.பி.

கொழும்பு, டிசெ. 29

"நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளித்தே அரசு ஆட்சி நடத்துகின்றது. கொரோனா வைரஸ் பரவலை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய நாடாக எமது நாடு முன்னிலை வகிக்கின்றது."

- இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொருளாதார பலமிக்க நாட்டையே 2019ஆண்டு



நவம்பர் மாதம் கையளித்ததாக எதிர்க்கட்சியால் கூறமுடியாது. ஏனெனில், அவர்களால் வெற்றிகரமாக நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதன் காரணமாகவே மக்களின் ஆணை எமக்குக் கிடைத்தது.

2015ஆம் ஆண்டு எதிரணி நாட்டைப் பொறுப்பேற்கும் போது நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு காணப்பட்டது, ஐந்து வருடங்களுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு உயர்த்தினோம், தனிநபர் வருமானம், டொலர் இருப்பு எவ்வாறு இருந்தது, நாட்டின் சொத்துக்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டன, உட்கட்டமைப்பு வசதிகளை எவ்வாறு மேம்படுத்தினோம், பொருளாதார பலமிக்க நாட்டையே நாம் கையளித்தோம் என்றவாரெல்லாம் எதிர்க்கட்சியால் கூறமுடியாது.

எதிர்க்கட்சியால் வெற்றிகரமாக நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாததன் காரணமாகவே நாட்டை ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தை மக்கள் எமக்கு வழங்கினர்" - என்றார். (இ - கே)

# 20 மூடை உரத்தை திருடியவர் கைது!

கொழும்பு, டிசெ. 29

கண்டி, புஸ்ஸல்லாவை யட்டகம பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில் வைக்கப்பட்டிருந்த 20 மூடை யூரியா உரத்தை திருடிய குற்றச்சாட் டில் நபர் ஒருவர் நேற்று அதி காலை கைதுசெய்யப்பட்டுள் ளார்.

புஸ்ஸல்லாவை யட்டகம பிரதேசத்தை சேர்ந்த நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 20 மூடை உரம், கடந்த 25ஆம் திகதி இரவு திருடப்பட்டது என வெயாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், சந்தேகத்துக்கிடமான ஒருவரின் வீட்டைச் சுற்றிவளைத்ததுடன் சந்தேகநபரையும் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, சந்தேகநபர் உரத்தைத் திருடியமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் திருடிய உரத்தை சிறிய ரக லொறியில் அநுராதபுரத்துக்குக் கொண்டு சென்று 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

உரத்தைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்திய லொறியையும் 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கைப்பற்றியுள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ - கே)

## சர்வஜன...

வலியுறுத்தி வருகின்றன. கூட்டு சமஷ்டியே நிரந்தர தீர்வாக அமைய முடியும் என்பது எமது கூட்டணியின் நிலைப்பாடு."- சி. வி. விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கும் முகமாக நேற்று அவர் அனுப்பி வைத்த பதிலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அந்தப் பதிலின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

"நில அபகரிப்பு, போரின் பின்னைய வறுமை, சமூக சீர்கேடு, இராணுவ மய மாக்கல் ஆகியன காரணமாக ஆபத்தின் விளிம்பில் இருக்கும் எமது தேசத்தைப் பாதுகாப்பதற்கு சில நடவடிக்கைகளை நாம் அவசரமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. "தீர்வு வரும், தீர்வு வரும்" என்று நாம் காலத்தை இழந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் நாம் எமது தேசத்தை இழந்துகொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை. ஆகவே தான் நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை நாம் பெற்றுக்கொள்ளும்வரையில் இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கு ஏற்கனவே சட்டத்தில் இருக்கும் அதிகாரங்களை நாம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று முயற்சிக்க வேண்டியுள்ளது.

தற்போது எமக்கு நாம் விரும்பும் ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ளும் காலம் கனிந்துவிட்டதாகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் 13 ஆவது திருத்த சட்டத்தை இதனால்தான் வலியுறுத்துகின்றோம் என்பதுபோலவும் உண்மைக்கு மாறான கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன.

அன்றே, நாம் 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு ஒற்றுமையுடன் நடவடிக்கை எடுத்து இருந்தால், இன்று மிகவும் பலமான ஒரு நிலையில் இருந்திருப்போம். அந்த நிலையில் நின்று கொண்டு எமது நிரந்தரத் தீர்வுக்காகப் போராடியிருப்போம். இன்று எமது நிலை மிகவும் வருத்தத்திற்குரியதாக மாறியுள்ளது. இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலைப் புறக்கணித்து வந்துள்ளார்கள். எந்தவகையிலும், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தக் கோருவது எமது சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுக்கான கோரிக்கையை பாதிக்க முடியாது. ஆகவே, தவறுகளில் இருந்து நாம் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கான நிறைந்த இறுதித் தீர்வு சர்வதேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாகவே நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. தமிழ் கட்சிகள் காலம் காலமாக சமஷ்டியை ஒரு தீர்வாக வலியுறுத்தி வருகின்றன. கூட்டு சமஷ்டியே நிரந்தர தீர்வாக அமைய முடியும் என்பது எமது கூட்டணியின் நிலைப்பாடு. இதனை நாம் தீர்மானிக்க முடியாது. எமது மக்களே தீர்மானிக்க வேண்டும். அதனால்தான் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு நாம் கோரிக்கை முன்வைத்திருக்கின்றோம். இதனை இந்தியாவிடமும் நாம் வலியுறுத்தி உள்ளோம். மீண்டும் வலியுறுத்துவோம். ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு இன்று நடக்கும், நாளை நடக்கும் என்று எதிர்பார்த்திருந்து எமது நிலத்தையும் மக்களையும் நாம் இழந்து விடக்கூடாது (ஐ)

## ஜனாதிப...

மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைதீன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிடுவதில் முஸ்லிம் கட்சிகளிடையே எழுந்துள்ள பின்னடிப்புக் குறித்து அவரை 'ஈழநாடு' தொடர்பு கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் கடித வரைவின் விடயங்களுடன் 75 முதல் 80வீதம் வரை எமது கட்சி இணங்குகின்றது. ஆனாலும், அதில் நாம் இணங்க மறுக்கும் சில விடயங்கள் குறித்து தமிழ்க் கட்சிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளோம். குறிப்பாக சில விடயங்களில் தமிழர் என்று குறிப்பிடப்படும் விடயங்களில் தமிழர் - முஸ்லிம் என்று வரவேண்டும் எனக் கூறியுள்ளோம்.

எனினும், சிறுபான்மை மக்களான தமிழரும் முஸ்லிம்களும் இணைந்து செயல்பட வேண்டும். தமிழ் மக்களின் காணிகளை சிங்களவர்கள் அபகரிப்பது போன்று எமது (முஸ்லிம்) மக்களின் காணிகளும் அபகரிக்கப்படுகின்றன. எனினும், சிறுபான்மைக்குள் சிறுபான்மையினரான எமது நலன்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எனினும், 13ஐ நடைமுறைப்படுத்தக் கோரும் கடிதத்தில் கையொப்பமிடுவது தொடர்பில் எமது கட்சியின் உயர்பீடம் கூடி எடுக்கும் முடிவுக்கு அப்பால் மக்களின் கருத்துக்களை நாம் அறிய விரும்புகிறோம். புத்திஜீவிகள், சிவில் அமைப்புக்களின் கருத்துக்களை பெற்று அவர்களின் ஆலோசனைகளின்படியே நாம் செயல்படுவோம். எனவே, அவர்களிடம் கருத்துப் பெறுவதற்காக சில நாட்கள் கால அவகாசத்தையே கோருகிறோம் - என்றார். (ஐ)

## சீனா - இந்தியாவின்...

இதற்காக இந்தியாவுக்கு காணி வழங்கப்பட்டதா என்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கிளிநொச்சியில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய வேளை அவ்வாறு காணி வழங்கப்படவில்லை என்று தெரிவித்த அவர், அபிவிருத்திக்கு எம்மிடம் நிதியில்லை. எனவே, வெளிநாடுகள் வரும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இதனிடையே, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆயிரத்து 260 கோடி ரூபாய் செலவில் அமைக்க முன்வந்த பருத்தித்துறை துறைமுக நகர திட்டத்தை செயல்படுத்த இந்தியாவும் சீனாவும் இப்போது போட்டியிடுகின்றன என்று தெரிவித்த அமைச்சர். பருத்தித்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியாவுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறினார்.

அண்மையில், யாழ்ப்பாணம் வந்த சீனத் தூதுவர் கியூ சென் ஹொங் பருத்தித்துறை துறைமுகத்தையும் சென்று பார்வையிட்டார். அத்துடன், இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேள்வி எழுப்பியமையும், மன்னார், இராமர் பாலத்தில், "இது முடிவல்ல ஆரம்பமும்கூட", என்று கருத்து வெளியிட்டமையும் இந்திய, சீனா மூலோபாய போட்டி வடக்கிலும் மையம் கொள்ள ஆரம்பித்து விட்டதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வல்வெட்டித்துறை...

ஜனவரி மாதம் 'வல்வெட்டித்துறை சர்வதேச பட்டத் திருவிழா'வாக போட்டியை முன்னெடுக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை வல்வெட்டித்துறை பட்டத் திருவிழா ஏற்பாட்டு குழுவினர் நேற்று கொழும்பில் சந்தித்துப் பேசினர். இதன்போதே, சர்வதேச பட்டத் திருவிழாவாக வல்வெட்டித்துறை பட்டப் போட்டியை முன்னெடுக்க முழுஆதரவு வழங்குவதாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்தார்.

ஆண்டுதோறும், தைப்பொங்கல் தினத்தில் வல்வெட்டித்துறை கடற்கரையில் பட்டத் திருவிழா நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 3-2)

## புகையிரத நிலைய...

பெற்ற விசேட கலந்துரையாடலில் சாதகமான தீர்வு எட்டப்பட்டதையடுத்தே தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கமைய தொடருந்து நிலைய அதிபர்கள் இன்று புதன்கிழமை முதல், பயணச்சீட்டு வழங்கும் நடவடிக்கை மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

## முஸ்லிம் கட்சிகளின்...

இதனிடையே, முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்தி இணக்கம் ஒன்றை எட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் பேச்சு நாளை அல்லது நாளை மறுதினம் இடம்பெறலாம் என்று அறிய வருகின்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ முன்னெடுத்தது. இதில் தமிழ்த் தேசிய கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், மலையகக் கட்சிகள் என 11 கட்சிகள் ஒன்றிணைந்தன.

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தின் வரைவை இந்தக் கட்சிகள் கூடித் தீர்மானித்தன. இந்த வரைவு இறுதி செய்யப்பட்டு விட்டதாகவும், கட்சித் தலைவர்கள் அநேகமாக இன்று கையொப்பமிடுவர் என்றும் இதன் ஒருங்கிணைப்பாளரும் வரைவை தயாரித்தவருமான ரெலோ கட்சியின் பேச்சாளர் கு. சுரேந்திரன் எமக்கு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், முஸ்லிம் கட்சிகள் வடக்கு, கிழக்கு இணைப்பு உள்ளிட்ட சில விவகாரங்களில் முஸ்லிம் கட்சிகள் பின்னடிப்பு காட்டின. இதனால், உட்கட்சி முரண்பாட்டை காரணம் காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கடிதத்தில் கையொப்பமிடுவதில் சிக்கல் நிலவுவதாக தெரிவித்தது. எனினும், அந்தக் கட்சி உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. இதே விடயத்தையே மற்றொரு முஸ்லிம் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் உள்ளது. எனினும், அந்தக் கட்சியின் செயலாளர் தாம் காலஅவகாசத்தை கோரியுள்ளதாக எமக்கு தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இரு கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர். இந்தச் சந்திப்பு நாளை அல்லது நாளை மறுதினம் கொழும்பில் நடக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சந்திப்பு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரை ஏற்பாட்டாளர்கள் தொடர்புகொள்ள எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை என்று அறிய வருகின்றது. எனினும், இதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், மற்றொரு முஸ்லிம் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நாயகம் தமக்கு இதுவரை அப்படி ஓர் அழைப்பு கிடைக்கவில்லை என்றும் கட்சியின் தலைவருக்கு கிடைத்தால் அது தொடர்பில் அவர் முடிவு எடுப்பார் என்றும் தெரிவித்தார். இதேவேளை, இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிடுவதில் தமிழ் அரசுக் கட்சிக்குள்ளும் இரு நிலைப்பாடு தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அந்தக் கட்சியின் தலை வர் மாவை சோ. சேனாதிராசா மறுத்துள்ளார். ரெலோவுடன் தமிழ் அரசுக் கட்சி இணைந்து எடுத்த முடிவில் கட்சி உறுதி யாக நிற்கும் என்று ஈழநாடுவுக்கு அவர் தெரிவித்தார். (ஐ)

## யாழ். பல்கலை...

இதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப் பொருட்களை பாரப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்திலும், விடுதிகளிலும் பெரு மெடுப்பில் சோதனைகளை நடத்தியிருந்தனர். இதன்போது, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தின் அறையில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் படம், மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாதைகள், உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன. இதையடுத்து, யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம். திவாகரன், செயலாளர் எஸ். பபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அன்றைய தினம் முன்னிரவு யாழ்ப்பாணம் நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இருவரும், 13 நாள்களின் பின்னர் மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சுமார் 30 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக குற்றப் பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழக மீனவர்களை...

திருமுருகன் இந்த மனுவை தாக்கல் செய்தார். தமிழ்நாடு மீனவர் உரிமை பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளராக உள்ள இவர் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 68 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. அவர்களின் 10 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை கைது செய்தது 1974 கச்சத்தீவு ஒப்பந்தத்துக்கு எதிரானது. கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கையில் பல்வேறு மனித உரிமை மீறலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். மீனவர்கள் உடல் முழுவதும் கிருமி நாசினி தெளித்து அவமதிக்கப்பட்டு உள்ளனர். எனவே, இலங்கைக் கடற்படை, கடலோரக் காவல் படையால் கைது செய்யப் பட்ட 68 தமிழக மீனவர்களையும், அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட 10 படகு களையும் விடுவிக்க உத்தரவிட வேண்டும்" என இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு இன்று நடைபெறும் விடுமுறை கால நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

## உடல்எடை குறைந்த...

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் 5 வயதுக்கு குறைந்தவர்களில் உயரத்திற்கு ஏற்ற நிறை காணப்படாதவர்களே குறைந்த நிறை உடையவர்களாக கருதப்படுகின்றனர். அந்த அமைப்பு முன்னெடுத்த ஆய்வுகளில் இலங்கை, இந்தியாவில் நிறை குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று தெரிய வருகின்றது.

இதேசமயம், உணவு பாதுகாப்பு மற்றும் போசனைக் குறைபாடு காணப்படுகின்ற நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## 3000 வர்த்தக...

மூடப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசிய சுயதொழில் வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், கொழும்பு நகரில் மாத்திரம், 80 சதவீதத்திற்கும் அதிகமான சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட ஏனைய உணவு விற்பனையகங்கள் மூடப்பட்டுள்ளன என்றும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## கொரோனாவுக்கு...

இதனால், கொரோனா தொற்றால் நாட்டில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 923 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## சைவ சமய...

குளம் சிவன் ஆலயத்தில் தமிழ் சைவப் பேரவையின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான வசந்தசேனன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாட்டை மீட்டெடுக்க புதிய ஆட்சி வேண்டும்

## மைத்திரி பகிரங்கமாகத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 29

**தற்போதைய குழப்பத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் புதிய தொலைநோக்குப் பார்வை கொண்ட புதிய ஆட்சியை உருவாக்க வேண்டிய தன் அவசியத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.**



முன்மொழியப்பட்ட விதி இது வரை இருந்த பாரம்பரிய அரச வடிவங்களில் இருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டை தேர்தல் அமைப்பின் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாடு இதுவரை இல்லாத பாரிய நெருக்கடிக்குள் தள்ளபட்டுள்ளது. நாடு தற்போது உணவுப் பற்றாக்குறையை நோக்கிச் சென்று கொண்டி ருக்கின்றது. இன்னும் ஓரிரு மாதங்களில் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும்.

எந்தவொரு கட்சியும் தனித்து அரசை அமைக்க வில்லை. தற்போதைய அரசுக்கு 69 இலட்சம் வாக்குகளை வழங்குவதற்கு 12 அரசியல் கட்சிகள் பங்களிப்பை வழங்கியுள்ளன.

இன்று சமூக, அரசியல் மற்றும் சர்வதேச துறைகளில் நெருக்கடியைக் காண்கின்றோம். மேலும் சர்வதேச உறவுகளை நிர்வகிப்பதில் பரிதாபகரமான தோல்வி உள்ளது.

ஊழல், மோசடிகள் காரணமாக சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த எவரும் அதைக் காப்பாற்ற வரமாட்டார்கள்.

அண்மையில், மேற்கத்தேய தூதரகத்தின் தூதுவர் ஒருவர் எனது இல்லத்துக்கு வந்து என்னைச் சந்தித்தபோதே இதைக் கூறினார்.

ஐ. நா. அமைப்பு மற்றும் உலக வங்கி மூலம் மேற்கத்தேய நாடுகள் மட்டுமே இலங்கைக்கு தங்கள் உதவிகளை வழங்கும்.

இடதுசாரி சாய்வு, முற்போக்குச் சக்திகள் உள்ளடக்கிய அரசியல் உருவாக்கத்தை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம்” - என்றார். (இ)

# உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து ஒருவர் மரணம்

## மிருசுவில் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

தென்மராட்சி, கொடிகாமம் - மிருசுவில் பகு தியில் உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்த நபர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 58 வயதான சுந்தரராஜா என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவத்தின்போது படுகாயமடைந்த நிலையில், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (இ - 03)

# 11 இலட்சம் ரூபாய் மோசடி: பெண் விளக்கமறியலில்

கிளிநொச்சி, டிசெ. 29

வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருட்கள் அனுப்பபட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வைப்பிலிடுமாறு கோரி சுமார் 10 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடி செய்தவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி - திருமுறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை கிளிநொச்சியைச் சேர்ந்த மற்றொரு பெண் தொடர்புகொண்டு வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருட்கள் அனுப்பபட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார்.

இதற்கமைய முறிகண்டியைச் சேர்ந்த பெண் சுமார் 10 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

இது தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது .

அதன்பின் பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் கொழும்பு தெமட்டகொடைப் பகுதியில் வைத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ். மாநகர முதல்வருக்கு எதிராக கூட்டமைப்பினர் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 29

யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் வி.மணி வண்ணனுக்கு எதிராக யாழ்.மாநகர சபை முன்றிலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



யாழ். மாநகர சபை அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது முதல்வரின் செயல்பாட்டுக்கு எதிர்ப்பு தெரி வித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பி னர்கள் வெளிநடப்பு செய்து மாநகர முன்றிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது முதல்வரின் அராஜகம் ஒழிக, சபையின் மாண்பை காப்பாற்று, வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்காதே போன்ற கோஷங்கள் மாநகர சபை உறுப்பினர்களால் எழுப்பப்பட்டன. (அ-03)

# டொலர் இல்லை எனக் கூறிக்கொண்டு மக்கள் பணத்தில் அரச தரப்பு சுற்றுலா

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 29

நாட்டில் டொலர் இல்லை எனக் கூறிக்கொண்டு மக்கள் பணத்தில் அரசு சுற்றுலா செல்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் டொலர் இல்லை என்றால் அதற்குரிய தீர்வைக் காண வேண்டும். சிறு தொழில் பயிர்ச்செய்கை வளப் படுத்த வேண்டும்.

குறிப்பாக தேயிலை உற்பத்தி நாட்டில் வளமான உற்பத்தி ஆகும். ஆனால், இங்கு தேயிலை உற்பத்தி செய்ய உரம் இல்லை. யார் இந்தச் சூழ்நிலையை உருவாக்கியது? அரசு மட்டுமே இந்தச் சூழ்நிலையை உருவாக்கியது.

அங்கு ஒரு பக்கம் எரிவாயு வெடிப்பு ஏற்படுகிறது. உயிர் சேதம் ஏற்பட்டுள் ளது. அதற்கும் தீர்வு என்பது இல்லை. வேறு எங்கேயோ நடந்ததைப் போல அரசு தரப்பினர் உள்ளனர். மக்களை இன்னலுக்கு உட்படுத்தி, அங்கு எல்லோரும் மக்களின் பணத்தில் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா சென்று குதூகலமாக உள்ளனர். சுற்றுலாப் பயணங்களை நிறுத்திவிட்டு மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகளைக் காணுங்கள்” - என்றார். (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-தலைவி,வானம்
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை



**இரவு**
7.00 மணி : பாரதீ
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10
10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில்
கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி
வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : இந்த வார புனிதர்
(யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : களீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு